ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

திராவிடநாடு

மலர் 3. | 26—11—44 | இதழ் 36.

எது உமது இடம்?

C. N. A.

கன்னிமாரா ஓட்டலிலே கனதனவான்கள் கூடிக், கவர்னர் பெருமானின் கோபத்தையும், சர்க்கார் சிப்பந்திகளின் சோகத்தையும், பதவிகள் ஊட்டிடும் மோகத்தையும், பட்டங்கள் காட்டிடும் பாசத்தையும் குறித்துப் பெருமூச்சுடன் பேசிக், களிப்புத்தீரப்பானம் அருந்திப், பாணம்பிறப்பிக்கும் உல்லாசத்துடன்உற வாடிவிட்டு, உலவும் நேரம்வந்து விட்டது, ஊர் விஷயம் பிறகு பார்ப்போம் என்று சொல்லிவிட்டுக்கலைந்துசெல்லும் காட்சி அங்கே!

கட்டைவண்டி! காடுமூரடான பாதை! காலை வெயிலில்! காட்டுப்பாக்கம்! அங்கோர் கலியாணம், அதற்கு இவர் புரோகிதம்! கிழவர் கட்டைவண்டியிலே உட்கார்ந்திருக்கிறார், இரட்டை மாடுகள் செட்டைப்பனைமரச் சாலையிலே வண்டியை இழுத்துச்செல்கின்றன, இதுஇங்கே.

"ஊங்கே அழைப்புச்சீட்டு" என்பது **அங்கே பிறக்கும் பேச்சு!**

"ஏனப்பா இவ்வளவு நேரம்?" என்பது இங்கே கிளம்பும் பேச்சு.

பங்குஎவ்வளவு? என்பதுஅந்தச்சிங்கக் கூட்டத்திலே விவாதிக்கப்படும், பாரம் எவ்வளவு தாங்கமுடியும் என்ற கணக்கு எடுக்கப்படும் இடம் இது.

பணம் அரசு அங்கே!
இன அரசு இங்கே!!
அது உல்லாச உலகம்!
இது உலைக்கூடம்!!
அது யோகிகளின் ஓய்விடம்
இது பாமரரின் திரு இடம்.

அங்கே போக உங்கட்குத் தங்கப்பிடியிட்டதடியும், சரிகைப்பொட்டிட்ட தலை அணியும் தேவை.

இங்கேவர உங்கட்கு, தணலில் நடக்கும் தைரியமும், சிறையில் உலவும் நெஞ்சுரமும், கரையில்லா வாழ்க்கை மீது குறைவில்லாப்பற்றும் தேவை.

அங்கே சென்றால் நீங்கள் மந்திரியாகலாம், ராஜதந்திரியாகலாம், துரைமாரின் துந்திபியாகலாம், சட்டசபையில்பட்டு மெத்தையில் திட்டமாய் அமர்ந்துகொட்டாவி விடலாம், அல்லது நெட்டுருப் பேச்சைக் கொட்டித்தள்ளலாம்.

இங்கே வந்தால் இடி அடிக்கு ஈடு கொடுத்தாக வேண்டும், கடுபிடிச் சட்டதிட்டம் கைகுலுக்கவேண்டும், எடுபிடி போல் கட்சியின் ஏவலாளியாகவேண்டும், ஒரு சமயம் சிறைக் காவலாளியின் பாராவிலே சிக்க வேண்டியும்வரும்.

ஆம்! உங்களை விருந்துக்கு அழைத்து மருந்து தரவில்லை! அங்கே இருப்பது தேன்குடம்! இல்லை என்று கூறி உங்களை தடுக்கவில்லை. ஆனால் அந்தத் தேனில் வீழ்ந்து மடிந்திருக்கும் தேள் உங்கட்குத் தெரியட்டும், அது விஷமூட்டப்பட்ட தேன்.

எங்களிடம் இருப்பது கரும்பு! அதனை கடிக்கக் கடிக்க இனிக்கும், சாறு உள்ளேபோவது மட்டுமல்ல, அதன் சக்கையை உமிழ் நீரிலே வைத்திருந்தாலும் இனிக்கும், ஆனால் கரும்புரசம், பெறக் கஷ்டப்படவேண்டும்.

அதிகாரத்தைக் கைபற்றுவதால் வரும் ஆனந்தத்தை அறிந்தவர்கள் அவர்கள்.

ஆரிய அகங்காரத்தின்முன், அந்த அதிகாரம், சோரம்போன சொர்ணம்சோர்ந்துவிட்டதுபோல் நிற்கும் என்பதை அறிந்தவர்கள் நாங்கள்.

சட்டசபையிலே உட்கார்ந்துவிட்டால் சகல ரோக நிவாரணியைத் தயாரித்து விடலாம் என்பது அவர்கள் சித்தாந்தம்.

அங்கே சென்றால் பதவி மோகம் எனும் மேகவியாதி பிடிக்கும், என்பது எங்கள் சித்தாந்தம்.

ஏடுகளிலிருந்து எண்ணங்களை எடுத்துக்காட்டும் எழில் அங்கே உண்டு. நாடு சுற்றிவந்து நவில்வது எமது வேலை.

அவர்கள் பட்டுப்பூச்சிகள், வெட்டுக்கிளிகள். அரசியல் வரணவேடிக்கை செய்து காட்டும் வாடிக்கைக்காரர்கள்.

நாங்கள், கதிரவன் கிளம்புகிறான் கண் விழியுங்கள் என்று கூவும் சேவல்கள், குடிசையின் கூரை மீது வசிக்கிறோம்.

அரசியலை மதுவாக்கி, மாளிகையை ஆடல் அரங்காக்கி, பதவிஎனும் பதத்திற்கு, படாடோபம் எனும் தாளமிட்டுப் பக்குவமான பரதநாட்டியம்பரங்கிமுன்ஆடிக்காட்டிப் பரிசுபெறும் பாக்கியசாலிகளாக உங்களுக்குவிருப்பமா, உழைப்பினால் உடல்மெலிந்து, வறுமையால் உருமாறி, உரிமைபெறவேண்டுமென்ற உணர்ச்சியால்போரிட்டு, வடுப்பெற்று, விளையாது களத்தில்நின்று, வான்போயினும் மாற்றானின் தாள்பணியாது சூள்உரைத்தபடிநடப்பது உயிர்ஊசலாடும்வரை என்றதுணிவுடன், போரிட, போரிட்டுப் புகழிடம்சேர, புகழிடம் சேருவதுமட்டுமின்றிப், பின் சந்ததி, மானத்தோடுவாழ ஒரு திருஇடத்தைத் தேடித்தரவிருப்பமா? உங்களுக்குவேண்டுவது என்ன? எது உமதுஇடம்? சேருமுன், சிந்தியுங்கள், சேர்ந்தபிறகு சித்தம் சிதையாமலிருக்க! கூடுமின், யோசியுங்கள், கூடியபிறகுவாடாதிருக்க.

(2ம் பக்கம் பார்க்க)

எது உமது இடம்?

1-ம் பக்கத்தொடர்ச்சி.

இங்கே நாங்கள் உழைப்பாளிகளைக் கேட்கிறோம், அரசியல் கழைக்கூத்தாடிகளையல்ல!

சமர்செய்யும் சக்தியுள்ளவரை அழைக்கிறோம், சர்களையல்ல, தீரர்களைத்தேடுகிறோம், திவான்பகதூர்களையல்ல.

இரணகளத்தை ரம்மியமானது என்று எண்ணுபவர்களைக் கணக்கெண்ணிப் பார்க்கிறோம், ராவ்சாகிபுகளையல்ல.

விடுதலை வீரர்களின் அணிவகுப்பிலே சேருமாறு அழைக்கிறோம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யாதிகாரிகள் ஓய்வுநேரத்திலே தயாரிக்கும் பொம்மைகளையல்ல.

போரிட, உரிமைபெற, அரசு அமைக்க, இன அரசு அமைக்க, எங்களுக்கு இனி எண்ணற்றவீரர்கள்தேவை, கண்ணளிக்கும் தீரர்கள்தேவை, மேலும் மேலும் தேவை, கண்மூடிவழக்கமெலாம் மண்மூடிப்போகும் காலம்பிறக்கும்வரையில் தேவை, திராவிடத்தின் தளைகள் அறுபடும்வரைதேவை, வலியோர் சிலர்எளியோர்தமை வதைபுரியும் வன்னெஞ்சம் ஒழியும்வரையில்தேவை, நீதிநிலைநாட்டப்படும்வரையில், வாளை உறையிலிடா வீரர்கள்தேவை! இது போர்வீரர்களைப் பழக்குவிக்கும் பாசறை! எண்ணித்துணியுங்கள், இனத்தை ஈடேற்றத் துள்ளிக் குதியுங்கள், நீங்கள் வீரர்வழிவந்தவர்கள்.

திராவிடநாடு திராவிடருக்கே என்பது பெரியாரின் சிந்தனையில்பதிந்த சித்திரம்! அது, பிரசாரம் எனும் ஓவியக்காரனால் தீட்டப்பட்டு, நாட்டுமக்களின் பார்வைக்குவைக்கப்பட்டிருக்கிறது. ஓவியக்காரன், ஒழுங்குபட,உயர்வுபடச்சித்திரத்தைத் தீட்டாமலிருக்கக்கூடும், அவனுக்கு வர்ணஜாலங்கள்தெரியாதகாரணத்தால்.ஓவியக்காரனின் திறமைக்குறைவினால் சித்திரத்திலே சிலகறைகள்காணப்படலாம், அவைகளைக்கண்டு சித்திரத்தை அளந்துவிடாதீர்கள், திறமையுள்ள ஓவியக்காரன்தீட்டினால் எப்படி இருக்கும் என்பதுபற்றிச் சிந்தியுங்கள். தீட்டியசித்திரம் திரையளவிலேஇருப்பதா! அதற்குச் சட்டங்கள் அமைத்துக், கண்ணாடியிட்டு, மனமாளிகையிலேஅதனை மாட்டி வைத்தாலன்றோ, மதிப்பு அதிகரிக்கும் என்று கூறுகின்றனர் சிலர். தீட்டிய ஓவியத்திரைக்குச், சட்டமிடட்டும், கண்ணாடிஅமைக்கட்டும், அக்காரியமும் ஓவியக்காரன் ஏன் செய்யவில்லையென்றுகுறை கூறுதீர்கல், அவன் அறியான் அந்த வேலையை, அந்த வேலையிலே மனதைச் செலுத்தினால், சித்திரம் தீட்டுவதிலே திறமைகுறையும், சட்டம் அமைத்துக் காட்டுங்கள், விருப்பமான, பொருத்தமான, வேலைப்பாடமிகுந்த, கண்கவரும் வனப்பாடுடைய, சட்டங்களை அந்தச் சித்திரத்திரைக்கு அமைத்துக்காட்டுங்கள். எந்தவிதமான சட்டம் அமைப்பினும் எமக்கு விருப்பமே, ஆனால் ஒரு வேண்டுகோள், சட்டம்அமைக்கும் ஆர்வத்திலே சித்திரத்தை மறைத்துவிடாதீர்கள்! சித்திரம் நன்றாகஇருக்கும்படியான அளவு சட்டம் அமைத்துக்காட்டுங்கள், என்று அவர்களைக்கேட்டுக்கொள்கிறோம், கழுத்தைநெரித்துவிடும்விதமான வைரமாலையை யார் அணிவார்கள்! அது கவனமிருக்கட்டும்!!-என்று நாம் கூறுகிறோம்.

இங்கு சித்திரம் இருக்கிறது, அங்கு அந்தச்சித்திரத்தை மறைத்துவிடும் அளவுள்ள சட்டங்கள் உள்ளன! இங்கும் அங்கும், நிலைமையில் நினைப்பிலேஇருக்கும் மாறுபாடுகளைக் கூறியாகிவிட்டது, மிரட்சிகொள்ள அல்ல, நிந்தனைக்குஅல்ல, உண்மையை உரைப்பதன்மூலம் உரம் பெற. சிரமசைத்துக் கரம்கொட்டினால் பயன்இல்லை. வேலைமகத்தானது, சாலை ஓரத்திலே மாலைநேரத்திலே உலவுவது அல்ல. சுரங்கவெடிகள்நிறைந்த களத்திலே, பிணவாடையின் மத்தியிலேநடப்பது. விடுதலை, ஒரு இனத்தின்விடுதலை, வீரர்களால்தான்முடியும், வீரரின்தன்மை இடர்கண்டு அஞ்சாமைதானே! சுடர் விளக்குபோன்ற கண்கள், எஃகுஉள்ளம் இருத்தல்வேண்டும். நெருப்பிடையே நீந்தவேண்டும்.

தீ! ஆம், தீமூட்டி விடுகிறோம், தீமூட்டி விட்டோம், தியாகர்வளர்த்த தீ, அதன் மூலம், அடிமைத்தனம் எனும் காடு அழியட்டும் என்றநோக்கம் நமக்கு. பரவும் தீயின் வேகத்தால், பதுங்கியுள்ள வர்ணாச்சிரமம் எனும்கருநாகம், தலையை நீட்டுகிறது. நாவை ஆட்டுகிறது, சுற்றிலும் தெரியும் தீச்சுழலில், தீய்ந்துபோகிறது. அடிமைத்தனம் எனும் காடு அழியமூட்டிவிட்ட தீயினால், சந்தனமரங்கள் சில கருகிவிடக்கூடும், ஆனால், அவைகளுக்கு அடியேகிடக்கும் ஜாதிபேதமெனும் விலங்குசாகும்! வேறு சந்தனங்களைப் பிறகுபெறமுடியும், ஆனால்கொடிய அந்தவிலங்கு உயிருடன் உலவும் வரை, சந்தனக்காட்டிலேஅதைத்தேடப்போய்ச் செத்தவரின் பிணவாடை வீசுமேயன்றி, மணமிராது. தீகண்டு, திகைக்கும்பழமை எனும்கிழப்புலி, சீறுவதும் அலறுவதுமாகக்கிடக்கிறது. தீயை அணையவிடாமல் இருந்தால், சீறும் அப்புலி மாளும்! தீயை அணையவிடாதீர்!! தீயருக்கு இடங்கொடாதீர்!!

தீ பரவுவதுகண்டு, காடுவிட்டுநாடு புகுமோ என்று சிலர் கலங்குகின்றனர். புகாது! காடுகனலிலே அழியும்போது, புகையும், சிறிதளவு சுடுநாற்றமும் வீசும் அவ்வளவே. நாடு கெடுமோ என்றஞ்சிக் காட்டுக்கிட்டிருக்கும் தீயை அணைக்க வேண்டாம். தீச்சுழலிலேபுகுந்து, துஷ்ட மிருகங்களைத் தாக்கும்போது, தீயினால் நீயே சுடப்படுவாயே தம்பீ! என்று புத்தி கூறுவோர் சிலர் உண்டு. ஆம்! தீ சுடும்! ஆனால் தீ, தணலாகிச், சாம்பலாகிப் போகாதிருக்க வேண்டுமானால், சுடுமே என்பதை மறந்து யாரேனும் அதைக் கிளறிவிட்டுக் கொண்டிருக்கத் தானே வேண்டும். அக்காரியத்தைக் கடமை எனக்கருதுவோரின் வீரத்தைப் பழிக்காதீர், விவேகத்தை அழிக்காதீர்.

இங்கே தீ மூட்டுவோர், அங்கே, தொலைவிலேதெரியும்தீகண்டு, திகைத்து, அதனை அணைத்துவிடும்படி அபாய அறிவிப்பு விடுவோர் உளர். இருபுறமும் உள்ள நிலையை உரைத்தாகி விட்டது. இனிக்கூறுங்கள், எது, உங்கட்கு ஏற்ற இடம்? தனியரசுடன் தலைநிமிர்ந்து வாழ்ந்த திராவிட இனத்தவராகிய உங்கட்கு! வீரத்திலே, அறிவிலே, சிறந்து வாழ்ந்தவர் வழிவந்த உங்கட்கு! பெருவாழ்வு நடாத்திய பெரியார்கள்வழிவந்த உங்கட்கு! வீரர்களுக்கு ஏற்றஇடம் எது? புலி புற்றிலே புகாது! திராவிடன் என்ற உணர்ச்சியுள்ளவனுக்குதனக்கேற்ற இடம் எது என்பதைக் கூறத்தேவை யில்லை. பனிரண்டு ஆயிரம் தோழர்கள் பதிவு செய்து கொண்டனர், நீங்கள்?

மற்றுமோர் முறை. காணுங்கள், இங்கே கல்லைத் தலையிலே சுமந்துவந்த கனகவிசயனின் காட்சியைக் காணலாம், அங்கே நாணலுக்கு நடுங்கிய நண்பர்களைக் காணலாம்! இப்போது கூறுங்கள், எது உமது இடம்? ஒன்று கேளுங்கள்! நீங்கள் "இங்கு", திராவிடர் கழகத்திலே சேருவீர்கள், வேறு இடம் போகமாட்டீர்கள், என்ற கடைசி எண்ணத்தோடுதான், கவிழ்ந்த அனிபாலிலிருந்து, செல்வம், ஓமான் கடலிலே வீழ்ந்திருப்பார்! நீங்கள் ஒன்று சேருவீர்கள், என்றநம்பிக் கையோடுதான், தாலமுத்துவும் நடராசனும் இறந்தார்கள்! இப்போது கூறுங்கள் எது உமது இடம்?

தந்தி:—"புறமார்க்" திருச்சி.

எழுத்தாளர் மாநாடு

[பாரதன்.]

"நான் என்ன செய்யட்டும் வீரா!"

"நீ, எதற்குத்தான். எப்போதுதான், என்னதான் செய்தாய், இப்போது இதற்கு ஏதாவது செய்ய!"

"சரிதான், என்றால்தான் ஒன்றும் முடியாது என்று தான் நீதான் ஒரு முடிவுக்குத்தான் வந்துதான் ஆகித்தான் விட்டதே, மேற்கொண்டுதான் என்னதான்பேச்சுத்தான் இருக்கிறது?"

"போதும், உன்னுடைய தான்கள்."

"நீதானே துவக்கினாய் "தான்" களை"

"ஒன்றுமே செய்யப்போவதில்லையா?"

"என்ன செய்ய, சொல்லு, முயற்சிக்கிறேன்"

"நல்லவேளை, முயற்சிக்கிறேன் என்றாவது சொன்னாயே, முயற்சிக்கலாமா என்று யோசிக்கிறேன் என்று சொல்லாமல். நீ ஏதாவது செய்துதானாகவேண்டும், ஆமாம், இதற்கு வழக்கம்போலச் சும்மா இருந்தால் அழகில்லை, நியாயமில்லை, தர்மமில்லை, ஆமாம், அவ்வளவுதான் நான் சொல்லுவேன், ஏதாவது செய்யத்தான் வேண்டும்."

கோவையிலே, நடைபெற்றதாம், எழுத்தாளர் மாநாடு, இதற்கு வீரன் போகவில்லை, அதனாலே பிடித்தது எனக்குத் தொல்லை. எழுத்தாளர் மாநாட்டின் நோக்கம் என்ன? விளைவு என்னவாக இருக்கும்? எழுத்தாளர் என்றால் யார்? அவர்களால் நாட்டுக்குக் கிடைக்கும் பலன் என்ன? என்றெல்லாம், நான் விளக்கிவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறான், வீரன். உரையாடலைக் கேளுங்கள்.

"வீரா! நாட்டிலே, எழுத்தாளர்கள் தொகை வளருகிறது, அது ஒரு நற்குறி. அவர்களுக்குள் ஒரு நல்ல தொடர்பு கிடையாது, அக்குறைபோக இம்மாநாடு ஒருவழி என்று நான் எண்ணுகிறேன், எழுத்தாளர்களை, ஆலை முதலாளிகள் கூலிகளை நடத்துவதுபோல, முதலாளிகள், நடத்திவருகின்றனர். எண்ணத்தை எழுகடலைத்தாண்டியும்செலுத்தி இளவரசனின் இருதயத்தையும் இடுப்புமுறிந்தவனின் எண்ணத்தையும், எதையும், எடுத்து எழுதும், எழுத்தாளர்களுக்கு இப்போக்கு கோபத்தை மூட்டுவது இயற்கை. எனவே அவர்கள் மாநாடு கூடினர், எழுத்தாளர்களின் நிலைமைபற்றிய பிரச்னைகளைப் பேசினர், அவர்களின் வாழ்க்கையிலே, நிம்மதியும் பாதுகாப்பும்தேவை என்பது உணர்ந்து, அதற்கான திட்டம் தீட்டினர், கழகம் அமைத்தனர், ஒரு எழுத்தாளரின் தலைமையிலே," என்று நான் வீரனுக்குக்கூறினேன்.

"பாரதா! எழுத்தாளர் என்றால் யார்?" என்றுகேட்டான் வீரன்.

"விசித்திரமான கேள்வியாக இருக்கிறதே?" என்று நான் சொன்னேன்.

"வேலி அமைத்துக்கொள்ளாதே, விஷயத்தை விளக்கு, எழுத்தாளர் என்றால் யார்? போர்வீரன், இசைவாணன், நடிகன், வணிகன், என்று ஒவ்வொருவரைக்குறிக்கின்றார்களே, பொருளோடு, அதுபோல எழுத்தாளர் என்றால் யாரைக்குறிக்கும் சொல்அது, நீ சொல்" என்று கொஞ்சம்கோபக்குரலிலே பேசினான் வீரன்.

"எழுதுபவர்கள் எழுத்தாளர்கள்."

"எதை எழுதுபவர்கள்?"

"கதை, கவிதை, கட்டுரை, காவியம், பத்திரிகைகள், புத்தகங்கள், ஆகிய இவைகளெல்லாம் எழுதுபவர்கள், எழுத்தாளர். இது என்ன, மிகமிக இலேசான பதந்தானே, வெள்ளையாகத் தெரியக்கூடியதுதானே,"

"இவ்வளவுதானா, இன்னமும் ஏதாவது உண்டா?"

"பூகோளம், சரித்திரம், சாஸ்திரம், வேதாந்தம், முதலிய பல பொருள்களைப்பற்றி எல்லாம் எழுதுபவர்களும் எழுத்தாளர்கள்தான். ஏன் நீ இவ்விதமாகக் கேள்வி கேட்கிறாய்? எதையோ மனதிலே வைத்துக்கொண்டல்லவா பேசுகிறதுபோல் தோன்றுகிறது"

"நீயும் ஒரு எழுத்தாளிதான். ஆகவேதான் கூட்டாளிகளைப்பற்றிக்கொண்டாட்டமாகப் பேசுகிறாய், ஆனால் நீ ஒரு ஏமாளி,; ஏன், பெரும்பாலான எழுத்தாளர்கள் ஏமாளிகள் தான்!"

"எழுத்தாளி ஏமாளியா? என்ன துடுக்குவீரா உனக்கு?"

"ஏமாளிமட்டுமல்ல, நோயாளியுங்கூட. ஏன் கோபமாக இருக்கிறதா? அது நோயின் குணம்! புத்தகப்பூச்சி வாட்டிடும் நச்சு, நோய்மூட்டிவிடுகிறது, முதலாளித்தனத்திலேசிக்கி, ஏமாளியாகிறார்கள், ஆக நான் சொன்ன, ஏமாளி, நோயாளி, என்ற இரண்டு அடைமொழிகளும் உன் கூட்டத்துக்குப் பொருத்தமானவைகளே."

"போதும் போதும், உன் கோமாளிப்பேச்சு, இனிமேல், எழுத்தாளர்களை ஏளனம் செய்ய முடியாது. முன்பு அவர்களுக்குள்—எங்களுக்குள்—கட்டுப்பாடு கிடையாது, ஒற்றுமை கிடையாது, தோழமைகிடையாது, இனி எழுத்தாளர்கள் எஃகுக்கோட்டை, தெரியுமா?"

"கோட்டை எஃகு, அகழியிலே தங்கம் உருக்கிவார்த்துவிட்டிருக்கும், சுவர்களிலே இரத்தினக்கற்கள் புதைத்திருக்கும், வெள்ளிமணியிருக்கும், அடுக்கு, அடுக்கப்பா பதங்களை! எழுத்தாளனல்லவா, எதுவும் சொல்லுவாய்."

"அப்படியானால், ஒற்றுமை கிடையாதா, முடியாதா?"

"ஒற்றுமையா? கோதுமைக்கே வடநாடு தேவை நமக்கு, ஒற்றுமை ஏது இங்கே.? கோவை மாநாட்டுக்குப்பிறகு, எழுத்தாளர்களின் பேச்சு எப்படி இருந்திருக்கும் தெரியுமோ?

தினசரி, தினமணியுடன் போட்டியிட்டுச் சமாளிக்க முடியுமா? என்று கேட்டிருப்பார் ஒரு எழுத்தாளர்.

முடியாது என்றபதமே என் அகராதியிலே கிடையாது என்று நெப்போலியன் சொன்னான் பாருங்கோ? என்றுசரிதச் சுவையைப் புகுத்திப்பேசியிருப்பரர் மற்றொருவர்.

சொக்கலிங்கம் பிரன்சு இலக்கியத்தைப் படித்திருக்கிறாராம் என்பார் மற்றொருவர்.

படித்ததுமட்டுமா, கரைத்துக்குடித்துமிருப்பார் என்று வேறொருவர் கேலிசெய்திருப்பார்.

குடித்திருப்பார், ஆனால் ஜீரணம் ஆயிராது என்று ஹாஸ்ய எழுத்தாளர் ஒருவர் பேசியிருப்பார்,

வ. ரா. வின் நடை இருக்கிறதே......என்று ஒருவர் புகழத்தொடங்கியிருப்பார்,

கலைந்த ஜடைபோல இருக்கும் என்று சினிமாவிமர்சன எழுத்தாளர் கூறியிருப்பார்.

கதை எழுதுவதிலே, கல்கியின் திறமை இருக்கிறதே..... என்றுபேச்சை வேறுபக்கம் திருப்பி இருப்பார் ஒருவர்.

இருக்கிறதே என்று சொல்லாதே, இருந்ததே என்று சொல்லும், என்று இலக்கணத்தோடு பேசுவார் மற்றொருவர், ஆனந்தவிகடனைவிட்டுக் கல்கி விலகியபோது, எழுதும் திறமையை அங்கேயே கல்கி வைத்துவிட்டுப் போய்விட்டார் என்ற நம்பிக்கையுடன்.

எழுத்தாளர் மாநாடு.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விகடனிலே [illegible]னமாதம் விரகதாபம் என்று ஒருகதை வந்ததைப் படித்தீரோ, என்று கேட்பார், அதை எழுதியவர்.

"ஆஹா! படித்தேன்! எழுத்தாளர்களுக்கு மதிப்பு வரவில்லை என்றால், எப்படிவரும்" என்று ஆத்திரத்தோடு ஒருவர் பேசுவார்.

என் கதை நன்றாக இல்லையோ? என்று எழுதியவர் பயத்தோடு கேட்பார்.

"கதை A 1. சார், முதல்தரமான கதை. நான் போன வருஷம் "சித்ரா"விலே எழுதினேன், பெயர்களை மட்டும் மாற்றிவிட்டு, விகடனிலே ஒரு காவாலிப்பயல் வெளியிட்டிருக்கிறான். இப்படித் திருட்டுத்தொழில் நடக்கிறது சார், எழுத்தாளர் உலகிலே, என்னசார் செய்வது, வெளியே சொன்னால் வெட்கக்கேடு" என்று அழுகுரலோடு பேசியிருப்பார் சித்ராவுக்குக்கதை தீட்டுபவர்,

இப்படிப்பட்ட பேச்சுகள்தான் எழுத்தாளர் மாநாடு முடிந்தபிறகு இருந்திருக்கும், இவர்களுக்குள் ஒற்றுமையாம், ஒற்றுமை. காகிதத்திலே கோட்டை!"

"இது சகஜம்வீரா! ஒட்டக்கூத்தருக்கும் கம்பருக்கும் இந்தப்பொறாமை இருந்துவந்ததாம், எழுத்தாளர்களுக்குள் இருக்கும் இக்குறை, யாரிடமும் காணக்கிடப்பது தான், ஆனால் இதனால் போட்டி ஏற்பட்டு, ஒவ்வொருவரும் தத்தமது திறமையை விளக்கத்தொடங்கி மொத்தத்திலே மக்களுக்கு மதுரமான விருந்து அளிப்பார்கள். இலாபமே தவிர நஷ்டமில்லை; என்ன நான் சொல்வது?"

"சாது அச்சுக்கூடத்துப்பாணி நீ பேசுவது. நான், அவர்களுக்குள்ளே நடைபெறும் உரசல்களைப் பிரமாதப்படுத்தவில்லை. ஒழியட்டும், மனிதசுபாவம். நான்சொல்ல வந்தது அதுவல்ல, எழுத்தாளர் என்றால், எழுதுபவர்கள் எழுத்தாளர்கள் என்று பொருள் கொண்டால் போதாது, எழுதுவது, குழந்தைபிறப்பதுபோல. கருவுறுவதுபோன்றது எண்ணம். கருவுக்கு, ஆண் பெண் இருத்தல்போல் எண்ணம் பிறக்க, காலமும் நோக்கமும் கூடவேண்டும். பிறகே எழுத்து. எழுத்தாளர் என்றால் இந்த இலட்சிய புருஷனாக இருக்கவேண்டும்"

"அதாவது, ஒரிஜினல், தானாகக்கண்டு பிடித்து எழுதவேண்டும் என்கிறாயோ?"

"அல்ல! தானாகக்கண்டு பிடித்தது, மற்றவர் கண்டது என்பதல்ல, உரைகல்"

"நீ என்ன சொல்லவிரும்புகிறாய்? எழுத்தாளர் என்றால் பலவகை என்கிறாயா?"

"ஏன் இல்லை?"

"கதைஎழுதுபவர், கட்டுரை எழுதுபவர், கவி...என்று பிரித்துப்பேசுகிறாயா?"

"இல்லை. முதலிலே ஒரு பெரிய பிரிவு. எழுத்தாளர் இருவகை. உள்ளதை எழுதுபவர் ஒருவகை, இல்லாததை எழுதுபவர் மற்றோர்வகை,"

"கற்பனைக்கதை எழுதுபவருக்கும் கட்டுரைகள் எழுதுபவருக்கும் உள்ள வித்யாசத்தைக்குறிக்கிறாயா?"

"அல்ல, அல்ல! கதைகள் கற்பனைகளானாலும், உலகிலே எங்காவது ஓரிடத்திலே உள்ளதைத்தான், கதையிலே காண்கிறோம். இருப்பது, இருக்கக்கூடியது என்ற இரண்டும் கதைகளிலே காணக்கிடைக்கும். நான் சொல்வது அதனையல்ல, இருக்கவேமுடியாதது, நடந்திருக்கமுடியாதது, அறிவுக்குமுரணானது, சில. அவைபற்றியே தீட்டும் எழுத்தாளர்கள் உண்டு. இருப்பது, நடப்பது, நடக்கக்கூடியது, அறிவுக்கு ஒத்தது, அனுபவபூர்வமானது ஆகியவற்றை எழுதுபவர் சிலர். இருவரும் எழுத்தாளர்களே, ஆனால் பாம்பும் தேரையும் ஜீவராசிகளிலே, ஒன்றுஎன்றுகூறுவதுபோலத்தான் இருவரையும்எழுத்தாளர்களென்று ஒன்று கூட்டிச்சொன்னேன், ஒன்றுக்கொன்று பகைதான்! இந்த இருவகை எழுத்தாளரின் போர் நடந்தபடி இருக்கிறது. சரி, பரதா! குதிரை என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை தீட்டச்சொன்னால் உங்கள் கூட்டம் என்ன எழுதும்?"

"இதென்னப்பா வேடிக்கை! நீ என்ன அவ்வளவு கேவலமாகவா எழுத்தாளர்களை மதிப்பிடுகிறாய்? குதிரையைப்பற்றி எழுதவா தெரியாது,"

"தெரிந்த விஷயந்தான், ஆனால் இதனை ஒவ்வோர் எழுத்தாளர் ஒவ்வோர் விதமாக எழுதுவர்.

ஒருவர், ப்யூசிப்பாலஸ் காலமுதற்கொண்டு பெருமை அடைந்தன குதிரைகள்—என்று எழுதுவார், அவர் அலெக்சாண்டர் எனும் கிரேக்கவீரன் ஏறிவந்த குதிரையின் பெயரைத் தெரிந்துகொண்டவர், மேனாட்டுச்சரித நிகழ்ச்சி அறிவு படைத்தவராக இருப்பார்.

நீலவேணியை நினைவிலே கொண்டுவருவார், தேசிங்குராஜாகதை தெரிந்த எழுத்தாளர், குதிரைகளிடம் எனக்கோ கோபம், தாங்கொணாக்கோபம், என் மணிவாசகன், இந்தப்பாழும் குதிரைகளாலன்றோ, சிறைப்பட்டான், துயர்ப்பட்டான், துன்புற்றான், என்று சைவமெய்யன்பை நகைச்சுவையுடன் தீட்டிப்பிறகு சமரசஞானத்தைக் காட்டவேண்டி, "மறுகணம் யோசிக்கின், பரியினிடம் பரிவே பிறக்கிறது. மணிவாசகரின்மந்திரிப்பதவிபோகவும்இடர்மிகவும் இறைவன் அருள்வந்து சேரவும் குதிரைகளே காரணம். மாணிக்கவாசகர் குதிரை வாங்கச்சென்றார், அப்பணத்தைக் கோயில் கட்டினார், மன்னன் தண்டித்தான், பின்னரே பெம்மானின் பேரருள்கிட்டிற்று, மணிவாசகம் பெற்றோம், எனவே மணிவாசகத்தை நாம்பெறக் குதிரையன்றோ காரணமாயிற்று. குதிரையே! உன்னைக்கும்பிடுகிறேன் என்று முடிப்பார் ஒரு எழுத்தாளி.

தாலிஅறுக்கும் பிசாசே! தந்தைக்கும் தனயனுக்கும் பகைமூட்டும் சனியனே! சூதுசூட்சியிலே மக்களைச் சிக்கவைக்கும் சகுனியே! உன்னால்கெட்டன குடும்பங்கள்! கொழுத்தனர் மார்வாடிகள்! குடித்தனத்திலே தீமூட்டினாய்! கொலைக்கும் களவுக்கும் காரணமானாய்! குதிரையே! கோரத்தின் சொரூபமே! பாவத்தின் கருவியே! பாதகத்தின் பங்காளியே! உன்குலம் அழிக, கூண்டோடுஅழிக, பூண்டின்றிஒழிக—என்று ஒருவர் எழுதுவார், கிண்டிக்குதிரைப்பந்தயத்தால்விளையும் கொடுமைபற்றிய கோபக்கொதிப்பினால். இப்படிப் பலவகை இருக்கும். ஆனால் நான் குறிப்பிடுவது இருவகைதானே, உள்ளது, இல்லாதது என்றதலைப்புடன். இந்த இருவகை எழுத்தாளர் விஷயமேமுக்கியமானது. உள்ளதைஎழுதுபவர், குதிரை நாற்காற்பிராணி என்றுதுவக்கி, அங்கஅடையாளம், இயல்பு, பலநாடுகளிலே உள்ளவகைகள், ஆகியவற்றை எழுதுவார்; இல்லாததை எழுதும் இயல்பினர் என்ன எழுதுவார் தெரியுமோ? என்ன எழுதியிருக்கிறார்தெரியுமோ? குதிரை சாமவேதத்தின் நாக்கிலே பிறந்ததுஎன்று எழுதியிருக்கிறார், நகைச்சுவைக்குஅல்ல! பிரம்மதேவன் ஓர் ஓமஞ்செய்தாராம், புகையினால் கண்கசங்கிற்றாம், நீர்ஒழுகிட, அதிலிருந்தும் குதிரை பிறந்ததாம்! மற்றோர்சமயம் பிரமதேவனை இலட்சுமிதேவியார், கோட்டானாகப் பிறக்கும்படி சபித்துவிட்டாராம். பிரமன் கோட்டானாகப்பிறந்தானாம். அந்தக்கோட்டான் முட்டையிலே குதிரைபிறந்ததாம்!! குதிரைபற்றி இதுபோலஎழுதிவைக்கப்பட்டிருக்கிறது ஏடுகளிலே, அந்தக்காலத்து எழுத்

(9-ம்பக்கம் பார்க்க)

திராவிட நாடு.

காஞ்சி 26—11—44 ஞாயிறு

நிறுத்தவேண்டும்.

அந்த அம்மையார், ஆனந்தமாக ஆலாபனத்தை அபிஷேகித்துக் கொண்டிருந்தார்! அபஸ்வரத்துடன் கூட உமிழ்நீரும் கலந்து வீசியதால் சபையிலே சங்கடந்தான் என்றாலும், இசைவிருந்தூட்டுவதாக எண்ணிக்கொண்டு அம்மை பாடியபடி இருக்கவே, படவேண்டியதைப் பட்டாகவேண்டும் என்ற வேதாந்தைத் துணைகொண்டு மன்றிலே பலர் இருந்தனர். அம்மைக்குத் தெரியாது, தமது ஆலாபனம், நள்ளிரவு நாராசமாக இருப்பது! கச்சேரியின் இறுதிக் கட்டத்திலே கனிவுடன் இசைவாணர்கள் கேட்பதுண்டு சபையினரை, என்ன தேவை? என்று. அம்மையும் கேட்டார்! அங்கொருவர், "ஆண்டிப்பண்டாரம்" கேட்டார் மற்றொருவர் "மாங்காய்ப்பாட்டு" கேட்டார். அம்மை இல்லை என்னாது ஈயும் இசைப்பகையாகி விட்டார். அல்லற்பட்டுக்கிடந்தார், முதல் வரிசைக்காரர் ஒருவர். அவரை அன்புடன் நோக்கி அம்மை, "என்னவேண்டும்?" என்று கேட்டார். என்னவேண்டுமென்று அவர் சொன்னார்? திருப்புகழ் வேண்டுமென்றா, தில்லானாதெம்மாங்கு தேவையென்றா, காவடிச்சிந்து வேண்டுமென்றா? அம்மை "என்னவேண்டும்?" என்று கேட்டதும், அவர், நிதானமாக ஆனால் தீர்மானமாக, "நிறுத்தவேண்டும்" என்றார்! அவர் விடுதலைபெற அந்த வீரஉரை தவிர வேறுவழி இல்லை! எவ்வளவுதொல்லையைப் பொறுத்துக்கொள்வார்!! சுரஸ்தானத்தைத்துச்சமாகக் கருதி, தாளத்தைத்துறந்து, இசைக்கு இயற்கைக்கருவி வாய் என்பதைமறந்து நாசிநாதம்கிளப்பி நள்ளிரவிலே அந்த அம்மை அவதியூட்டினார்கள். எப்படிச் சகிப்பது? என்று ஏங்கினர், துணிந்து கூறினர், நிறுத்த வேண்டும் என்று!

இழுக்குள்ள இசையைக் கேட்பது, அழுக்குள்ள உணவைப்புசிப்பது, சருக்குள்ள வழியிலே நடப்பது, வேதனைதருவனவேயாகும். துணிவினால் தொல்லையைத்துண்டித்த தோழன்போல், நாட்டு மக்களுக்கு இன்றோர் துணிவு சேவையாக இருக்கிறது. நிறுத்தவேண்டும் என்று கூறிட நெஞ்சிலே உரம் வேண்டும். யார்? எங்கே, அந்த அம்மைபோல இழுக்குள்ள இசைபாடி இன்னல் விளைவிக்கின்றனர் என்று கேட்பர். அம்மையல்ல, ஒரு ஐயன்! அவர் இசைபாடியல்ல இன்னலை விளைவிப்பது, அரசியலில் ஈடுபட்டு அல்லலை விளைவிக்கிறார். அவர் தொட்டது துலங்கினதில்லை! ஆனால் பட்டமரத்தையும் துளிர்விடச்செய்வேன் என்று கூறுகிறார். அவர் எடுத்ததை முடித்ததில்லை, ஆனால் அவர் எடுக்காதது ஒன்றும் இல்லை. அவர் தொடுத்த அம்புகள் பலப்பல, ஆனால் அவை யாரையும் துளைத்ததில்லை! தோல்வியினால் அவர் ஓய்வதில்லை! மக்களின் சஞ்சலத்தைக் கண்டு சாய்வதில்லை! வட்டத்தைச்சதுரமென்பார், இல்லையே என்றெவரேனும் உரைத்திடின், உன் கண் பொட்டை என்பார்! கன்னல் கசக்குமென்பார், இல்லை என்போரின் சொல்லை இழுக்கு என்பார்! ஒன்றுரைப்பார், அதற்குஒன்பதுண்டு பொருள் என்பார். ஒற்றுமை வேண்டுமென்பார், அது வேற்றுமையித்திலே விளையு மென்பார். அவர்மொழி கேட்டுப் போரிட்டுப் போரிட்டுப் பலருக்கு உடலிலேயும் உள்ளத்திலேயும் வடுக்கள் நிரம்பி விட்டன, ஆனால் வெற்றியோ, பெற்றாரில்லை. முறையையும் கருவியையும் மாற்றுவார், ஆனால் தோல்வி அவரைத்தழுவத் தவறுவதில்லை! ஆம்! காந்தியாரைத்தான் நாம் குறிப்பிடுகிறோம், அவருடைய செயலைத்தான் நாம் இழுக்குள்ள இசைஎன்று கூறினோம். என்னவேண்டும்? என்று கேட்ட இசைப்பகையாருக்கு, நிறுத்த வேண்டும் என்று ஒரு தீரன் கூறினதுபோல, நாட்டு வாலிபர்கள், காந்தியார், இனி என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும்போது, தயவு செய்து அரசியல் காரியத்திலே ஈடுபடுவதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று கூறவேண்டிய காலம் பிறந்துவிட்டது. வாலிபர்களுக்கு அந்தத் துணிவு பிறந்துவிட்டதோ இல்லையோ நாமறியோம், ஆனால் காந்தியார் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டியகாலம் நிச்சயமாகப் பிறந்துவிட்டது என்று கூறுவோம். அவருடைய அந்தஸ்த்தையும், ஆதாவுதருவதற்கு அவரைச்சூழ்ந்து கோடீஸ்வரர்கள் உள்ளனர் என்பதையும் அறிந்துதான் கூறுகிறோம், காந்தியார் நாட்டுக்குச்செய்யவேண்டிய ஒரேஒரு நற்காரியம், அரசியல் வேலையை நிறுத்திக்கொள்வது என்று. காந்தியார் அடுத்த வேலையாக எதைச் செய்வார், என்னசெய்வார், என்ன செய்ய யோசிக்கிறார், என்னசெய்ய வேண்டும் என்பன போன்ற விஷயங்களிலே பலர் இன்று கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நமது கருத்து, பலருக்குக் கசப்பூட்டும், ஆனால் நாட்டு நலனை நினைவில் நிறுத்தியே நாம் கூறுகிறோம், காந்தியார் செய்யக்கூடிய ஒரேஒரு நற்காரியம், இனி அவர் அரசியல் காரியங்களிலே வேலை செய்வதை நிறுத்திக்கொள்வது தான்! காந்தீயர்கள் கோபத்திற்கு இரண்டாமிடமும், அறிவுக்கு முதலிடமும் தந்து, நமது கருத்துக்குக்காரணம் என்ன என்பதை யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம். காங்கிரசுக்கு எதிரிடையாக உள்ளவரின் உரையைக்கேட்பதே உத்தமபத்திரருக்கு அழகல்ல என்ற உன்மத்தர்களையல்ல, நாட்டு விடுதலைக்காகப்பலர்கூறும் யோசனைகளையும், விருப்பு வெறுப்பு என்ற சுழலிலே சிக்காது நின்று ஆராய வேண்டு மென்ற நோக்கமுடையவர்களையே அழைக்கிறோம் 'நமது கருத்தினைச் சீர்தூக்கிப் பார்க்கும்படி.

காந்தியர் கை வைத்ததுஅத்தனையும், கருகிவிட்டிருக்கிறது.

நாளுக்குநாள் அவருக்குள்ள ஆதரவாளரின் தொகை குறைந்தவண்ணமும், அதேசமயம், அவருக்கு மாறானமுகாமில் இருப்பவரின் ஆதரவு வளர்ந்தபடியும் இருக்கிறது.

காந்தியாரின் "கைகண்ட முறை"யான சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை ஆகியவை, திடீர்க்குழப்பத்துக்கும். காட்டுக்கூச்சலுக்கும், கடுமையானஅடக்குமுறைக்கும் இடமளித்ததே தவிரவெற்றியைத்தாவில்லை.

காந்தியாரின், அரசியல் நுழைவுநோத்திலே அவருக்கும் அவருடைய கூட்டுத்தோழர்களுக்கும் இடையே இருந்துவந்த ஒருமைப்பாடு, சீர்குலைந்துவிட்டதுடன் பலதிறப்பட்ட கருத்துடையவர்கள், அவரைவிட்டுப்பிரிந்தால் தமக்குத்தனிவாழ்வு இருக்குமோ இராதோ என்ற சந்தேகத்தினாலும் பயத்தினாலும் மட்டுமே அவருடன் கூடிவாழ்வதாக இன்று நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

காந்தியாரின் கட்டளைகள் "ஜே" கோஷத்தைக்கிளப்பினவேயன்றி, நாட்டிலே, பலமானதோர் எதிர்ப்புச் சக்தியை, ஒற்றுமையுள்ள முன்னணியை உண்டாக்கவில்லை என்பதைச் சர்க்கார் உணர்ந்துகொண்டு, காந்தீயம் காகிதக் கோட்டை என்று தீர்மானித்துவிட்டனர்.

காந்தியார், இந்தியரின் தலைவராக, அரசியலில் ஆரம்பமாகிப்,பிறகு இஸ்லாமியருக்கு வேறு தலைவரும், ஆதித்திராவிடருக்கு வேறு தலைவரும், திராவிடருக்கு வேறுதலைவரும், இந்துக்களுக்கு வேறு தலைவரும், சீக்கியருக்கு வேறுதலைவரும், மிதவாதிகள், வைதிகர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு வேறு வேறு தலைவரும், தோன்றித், தனித்தனி அமைப்புகளும், வெவ்வேறு சக்திகளும், ஏற்பட்டுவிட்டதால், இப்போதுகுறிப்பிட்ட சிலர்களுடன் வாழவேண்டிய அளவிலே வந்துவிட்டார்.

இந்தியர் என்ற கற்பனைப் பொறியிலே முதலிலே சிக்கியிருந்து இன்று விடுதலைபெற்ற இனத்தவரை, மீண்டும் இழுக்கக்காந்தியார் வீசியவலை அறுந்துவிட்டது.

காந்தியார், சர்க்காருடன் நடத்திய "போராட்டங்கள்" யாவும், தோற்றுவிட்டன.

இவ்வளவுக்கும் காரணம், காந்தியார், மகாத்மாவானதுதான்! கேலிக்கல்ல நாம் கூறுவது. காந்தியார், மகாத்மாவாக்கப்படாதிருந்தால், இவ்வளவு, தோல்விகள் ஏற்பட்டிரா. தோல்விகள் ஏற்பட்டாலும்

நிறுத்தவேண்டும்.

5-ம் பக்கத் தொடர்ச்சி.

உடனே நாடு வேறு தலைவரைத்தேடி இந்நேரம் விடுதலைப் பாதையிலேவிரைந்துசென்றிருக்கும். காந்தியாரை, மகாத்மாவாக்கியவர்கள், அறிந்தோ அறியாமலோ, நாட்டுவிடுதலைப்பாதையைநாசம் செய்தவர்கள் என்று நாம் இன்று கூறினால் பலருக்குக் கோபம் வரும், ஆனால் சிந்தனைக்குவேலை தருவதற்குப்பதில்அவர் தம் சிந்தனைக்கு வேலை தந்தால், உண்மையை உணருவர்.

“உலகமே அவரை மகாத்மா என்று போற்றுகிறதே எடா! மூடா! அவரையா நீ தூற்றுவது? ஆங்கில நாட்டிலே அவரை ஏத்தி ஏத்தித் தொழுகின்றனர், அமெரிக்காவிலே அவரை அவதார புருஷர் என்று அழைக்கின்றனர், மேனாட்டு மேதாவிகள் அவரைமோனநிலை உணர்ந்த முனிவர் என்று போற்றுகின்றனர், ஈனனே! அவரையா நீ பழிக்கிறாய்” என்று நம்மைக்கண்டிக்க ஏடுகள் பல உண்டு. அகராதிகளிலே பல பதங்கள் அவர்களின் கோபத்துக்குத்துணைபுரிய உதவும். இதை நாம் அறிவோம், அறிந்தும் கூறுகிறோம், காந்தியார்மகாத்மாவானதால்தான்,தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டது என்று. அது மட்டுமல்ல, உலகமே அவரை மகாத்மாஎன்று புகழும்போதுநீயார் அவரைப் பழிக்க என்று கோபித்துக்கொள்ள விரும்பும் தோழர்களுக்குக் கூறுகிறோம், ஆங்கிலநாடும் அமெரிக்க தேயமும், அவரை மகாத்மா என்று புகழ்வதே, ஒரு ராஜதந்திரச்சூழ்ச்சி, ஆம், விடுதலைவீரனை மகாத்மாவாக்கிவிடுவதால், மேனாட்டுக்கு அரசியல் இலாபம் இருக்கிறது. காந்தியார் ஒரு மகாத்மா என்று மேனாடுகள் புகழ்வதற்குக் காரணம் என்ன? அவர் ஒரு மகாத்மா, ஆகவே புரட்சி நடவாது, என்று உறுதி கூறித்தத்தம் நாட்டு மக்களிடை, இந்தியா, மேனாட்டுக்கு வெள்ளாட்டியாக இருக்கும் கவலை கொள்ளாதீர் என்று எடுத்துக்கூறுவதற்குத்தான், மகாத்மா என்ற சின்னத்தைக் காந்தியாருக்குச் சூட்டினர்.

“இந்தியாவிலே பெரிய கொந்தளிப்பாமே. விடுதலைக்காக அங்கே மக்கள் விம்முகின்றனராமே” என்று, ஆங்கில, அமெரிக்கப் பொதுமக்கள் கேட்பர், “ஆம்!” என்று புன்சிரிப்புடன் ஏகாதிபத்தியம் பதில் கூறிவிடும். ஏகாதிபத்தியத்தின் மனதிலே இந்தப்போர் மூள்கிறது.

“இந்தியமக்களின் சுதந்திரக்கோரிக்கைக்கிளர்ச்சி வலுப்பெறுகிறது. இது புயலாகிவிடுமோ?”

“புயலாகிவிட்டால் அடக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும், ஆகவே புயலை அடக்கவேண்டும் முதலிலேயே.”

“ஆமாம்! இந்திய சுதந்திரக்கிளர்ச்சிக்கு யார் தலைவர்?”

“பலர், இருக்கிறார்கள். ஆனால்மோகன் தாஸ் கரம்சந்த்காந்தி என்பவருக்குத்தான் முதலிடம்தந்திருக்கின்றனர்”

“அப்படியா?காந்தியாருக்குமற்றத்தலைவர்கள் கட்டுப்பட்டுஇருக்கின்றனரா?”

“ஆமாம்! பலதலைவர்கள், பல வகுப்புகள், அவர்பேச்சைச்சட்டமென்று கொண்டுநடக்கின்றதாகக்கேள்வி.”

“சந்தோஷமான செய்தி!”

“சந்தோஷமா? ஒரு தலைவர், இந்திய விடுதலைப்போரின்சகல சக்திகளையும், நடத்திச்செல்கிறார் என்று கூறுகிறேன், இந்தச் செய்தியைச்சந்தோஷமான செய்தி என்று சொல்கிறாயே, உனக்கென்ன சிறுமதி!”

“சிறுமதி எனக்கல்ல! காந்தியாரின் கட்டளைப்படி இந்திய விடுதலைப்போர் வீரர்கள்நடக்கிறார்கள் என்றுதானே கூறுகிறாய், அதைத்தான் நான் மகிழ்ச்சியான செய்திஎன்றுகூறினேன். ஏனெனில், இந்தியா, பரந்தஇடம், அங்குபல தலைவர்கள் இருந்திடுவது இயற்கை. ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவிதமான சக்திஇருக்கும் யுக்திதோன்றும், ஒன்றுஇல்லாவிட்டால் மற்றொன்று பலித்துவிடக்கூடும், என்று பயந்திருந்தேன். நீ சொன்னதிலிருந்து, அங்கு, பலதலைவர்களும் ஒரு தலைவரின்கட்டளைக்கு அடங்கிஇருப்பதாகத்தெரிவதால், இனி எந்தெந்தத் தலைவர் என்னென்ன முறையைக் கையாண்டு நம்மை எதிர்ப்பரோ என்ற பயமில்லை! நாம் ஒரே ஒரு தலைவரின் சக்தியும் யுக்தியும் எப்படிஇருக்கிறது என்பதைக்கவனித்தால்போதும், அதை அடக்க ஒரு வழிகிடைத்துவிடும், அவரை அடக்கிவிட்டால்எதிர்ப்புச்சரிந்துவிடும்.”

“உனக்குத்தெரியாது, அந்தக்காந்தியாருக்குள்ளசெல்வாக்கு. அவரை ஒரு சாமான்யமான தலைவராக அந்நாட்டு மக்கள் கருதவில்லை. அவதாரபுருஷராகமதிக்கிறார்கள். மகாத்மா என்று அழைக்கிறார்கள்”

“பேஷ்! பேஷ்!! மகாத்மாவென்றா அழைக்கிறார்கள்? மிகமிக மகிழ்ச்சி. மகாத்மா நீடூழிவாழட்டும், அவருடைய மகாத்மாபட்டத்தை நாம் போற்றுவோம்புகழுவோம், உலகெங்கும் அதைப் பரப்புவோம்”

“பித்தமா உனக்கு! இந்திய விடுதலை இயக்கத்தின்தலைவரைப் புகழ்கிறாய், போற்றுகிறாய், புவியிலேஅவர்பெயரைப் பரப்புவேன் என்றுகூறுகிறாய், என்ன போக்குஇது! எரிமலையை அரியணையாகக்கொள்கிறாய்!”

“பித்தன் நான்அல்ல, விடுதலை இயக்கத்தை ஒருவீரன், தந்திரம் தெரிந்த தீரன், புரட்சிக்காரன், நடத்துகிறான் என்றால் நாம் பயப்படவேண்டும், ஏனெனில் அவன் தீமூட்டிவிடுவான், திடீர் அதிர்ச்சிகள்தோன்றும், எந்தச் சமயத்திலே எந்தவிதமானபோக்குஇருக்குமோ என்றுகூறமுடியாது. புரட்சிக்காரன், விடுதலை இயக்கத்தைநடத்தினால் அதன் போக்கு எந்தவிநாடியும் விபரீதமாகிவிடக்கூடும். ஆனால், ஒரு மகாத்மாவன்றோ மக்களின் தலைவராகஇருக்கிறார்! இதனால், நமது ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படாது. மகாத்மாக்கள், சன்மார்க்கம்பேசுவர், சாந்தியைத்தேடுவர், அன்புநெறியினைக்கடைப்பிடிப்பர், ஆண்டவன் மீதுபாரத்தைப்போட்டுவிடுவர், ஆயாசம் பிறக்கும்போது, அவன்விட்டவழிப்படி நடக்கட்டும்என்று சொல்லிவிடுவர். ஒரு மகாத்மாவால் நடத்தப்படும் இயக்கத்திலே, தலையாட்டிகளும், மந்தமதியினரும், பக்தியைமட்டுமேசக்தியாகப்பெற்றவர்களும் இருப்பர். அவர்களால் உரிமைப்போரை முறைப்படிநடத்தமுடியாது. ஆகவேதான் காந்தியாருக்கு மாகாத்மாபட்டம் இருப்பதுகேட்டுநான் மகிழ்கிறேன். உலகிலே இதுவரை எந்த விடுதலைப்போரும் மாகாத்மாக்கள்நடத்தி வெற்றிகண்டதில்லை. பிறவிப்பிணி நீக்குவதும், அருட்கடலைஅடைவதும், மகாத்மாக்களின்வேலை. அவர்கள் விடுதலைப் போரிலேநுழைந்தால், பலன்கிட்டாது, புகழ்கிட்டும். ஒரு தனிமனிதர், அதிலும் சாதுஎன்றும், சாந்தமூர்த்திஎன்றும் புகழ்பெறுவதிலே நமக்குஎன்னநஷ்டம்? ஆகவேதான், ஏகாதிபத்யத்தின் நன்மையைக்கோரிச்சொல்கிறேன், காந்தியாருக்குமகாத்மாப்பட்டம்இருப்பது நமக்கு ஒரு இலாபம்!”

“அவருடையகீர்த்தியை நாமும் சேர்ந்து பரப்பிவிடுவது, அவருடைய கரத்தையும் அவர்நடத்தும் இயக்கத்தையும் வலுவுடையதாக்கிவிடாதோ?”

‘அவருடையகரம்வலுவடையும், ஆனால் இயக்கம் வலுவடையாது, அவருடைய கரமே அந்தஇயக்கத்தைநெரித்துவிடும்.’

“அதுஎப்படிஎன்றுவிளங்கவில்லையே.”

‘உலகெங்கும் தன்னை ஒரு மகாத்மா என்றுபுகழஆரம்பித்ததும், அவருக்கு ஒரு எண்ணம்உண்டாகும், அதாவது அந்தப் பட்டத்துக்குஏற்றபடி நடக்கவேண்டும் என்று. ஆகவே அவர், சாந்தி, அன்பு, சன்மார்க்கம், அகிம்சை, ஆண்டவன் அருள், முதலியனபற்றிப் பேசிப்பேசி, மேலோங்கியும், பயங்கரவேகம் பெற்றும் இயற்கையாகவளரும் விடுதலைஉணர்ச்சியை, நெரித்துவிடுவார். அதுமட்டுமல்ல. ஒரு விடுதலை இயக்கத்துக்கு எது காலம்கண்டறிந்தமுறையோ அதையே தானும்கூறினால், அதிலேதும் புதுமையும் மகிமையும்இராது, எனவே மகாத்மாவாகியதால், வேறுஒரு புதியமுறையை,

(8-ம் பக்கம் பார்க்க)

எழுத்தாளர் மாநாடு.

10-ம் பக்கத் தொடர்ச்சி.

புதுவுடை யணிந்து, குதுகலத் தோடு,
உண்டி யுண்டு களிக்கும் மாந்தரீர்,
எம்போ லுள்ளோர் நும்போல் மகிழ்வுறும்
அன்னாள் என்னாள்? அன்னாள்
நன்னாள், பண்டிகை நாளும் அதுவே.!

"பரதா, அருமை, அருமை, இதுவல்லவோ எழுத்தாளன் வேலை, இது எங்கே கிடைத்தது."

"தீபாவளி சமயத்திலே நவயுவன் என்ற வாரப்பத்திரிகைவெளியிட்ட பாட்டு இது, இது மட்டுந்தானா? தீபாவளி கொண்டாடச் சொல்பவன் ஒரு வீணன், கோமாளி,என்றெல்லாம் கண்டித்துக் கூறுவோமல்லவா நாம்?"

"ஆமாம், அவன் ஓர்வீணன்என்பதிலே சந்தேகமென்ன"

"இதோ இதைப்படித்துப்பார்.

கூதிர்வாடையில் கொட்டும் மழையில் வீட்டில்
கொலுவுற்ற ஓர் விளக்கணையுமென்று
வீதிய தெங்கும் விளக்கேரித்து அதை
விந்தை தீபாவளிஎன்றவன் யார்?

*

ஓடி அலுத்துவரும் வழியில்—சேறு
ஒட்டிய கந்தைத்துணி விலக்க
கோடியுடுத்தி குளிர் தணித்து—அதைக்
கொண்டாட்டமாக்கிய கோமாளி யார்?

*

ஆடுகோழியும் பலிகொடுத்து—எங்கோ
அசுரன் மடிந்தனன் என்று சொல்லி
வீடெல்லாம் வேடிகள் முழங்கச்செய்து—அதை
வேடிக்கையாக்கிய வீணனும் யார்?

"பலே, சரியான சவுக்கடி, இது யார் எழுதியது,"

"இது கலையைக் காப்பாற்றும்கலாரசிகர் சிதம்பரநாதரை ஆசிரியராகக் கொண்டிருக்கும் கௌரவம் வாய்ந்த வசந்தம் பத்திரிகையிலே இருப்பது. அதுமட்டுமல்ல வீரா, சொர்க்கமாவது நரகமாவது, அந்தப் புராணப்புளுகைநம்பாதே, நரகன் என்ற அசுரனைக் கண்ணன் கொன்றான் என்று எவனோ எதற்கோ எழுதிய சட்டுக்கதையை வைத்துக்கொண்டு ஒரு விழா, இது வீணல்லவா என்றெல்லாம் நாம் கண்டிக்கிறோமல்லவா?"

"ஆமாம், அதை இந்த எழுத்தாளர்கள் கேட்டால்தானே?"

"கேட்டதுமட்டுமல்ல, பாட்டாகத் தீட்டியு மிருக்கின்றனர்.படி இதனை."

கண்காணா இடத்திலே சொர்க்கமென்றோர்
கட்டுக்குள் அடங்கிநிற்கும் எல்லை உண்டு
மண்காணாததனை யென்னும் புராணப் பேச்சை
மனத்துக்குள் வாங்காதே, தமிழா: இங்கே
எண்காணுவள மெல்லாம் படைத்து வாழ்ந்தால்
இதுவேதான் சொர்க்கமாடா தம்பீ, வீணே
விண்காணாய், அமரர்களைக் காணுயென்று
மின்னல் தவழ் வானகத்தைப்பார்க்க வேண்டாம்
இருள் நிறைந்து மனிதருள்ளம் ஞானம் நீங்கி
எழிலழிந்தும்மனைகளெல்லாம் புழுதிபூத்து
மருள்சேறிந்து நாட்டினிலே வளங்கள்மாய்ந்து
மக்களெல்லாம் தொழுமாடாய்விலங்
காய்ப்போனால்
அருள்மிகுந்து தெய்வமெலாம் கூடிஇங்கே
ஆட்டங்கள்போட்டாலும் நரகம்ஈதே
இருளொழிந்து மனிதரெலாம் அறிவால் ஓங்கி
இன்பவாழ்வடைந்துவிட்டால் இதுவேசொர்க்கம்.
நரகனென்றோர் அசுரன் முன்னம் பெண்டிர்
தம்மை
நலிந்துசிறைஇருத்திவிட்டான்; கண்ணன்தோன்றி
உரமுடனே அவனையழித்துலகம் எல்லாம்
ஒளியாக்கி களிதேக்கிவைத்தான் என்பர்.
பரவுகின்ற இன்பத்தின் உருவம்பெண்மை:
பாரினிலே இன்பமின்றி அஞ்ஞானந்தான்
விரவிநின்று மனிதர்களை நலிவுசெய்ய
மேலெழுந்து மெஞ்ஞானம்வென்றதம்மா.
இதனையொரு கதையாக்கி விழாவுமாக்கி
இன்று தீபாவளியென்றொரு பேர்இட்டார்;
விதவிதமாய் வேடிசுட்டுப் புதியஆடை
மேலணிந்து வயிறுமுட்ட விருந்தைஉண்டு
அதனாலே தீவிளிதான் நிறைதல்இல்லை;
அன்பினொடுந் தெய்வவருள் நினைந்துநாட்டில்
பொதுவாக எங்கெங்கும்மலிந்த தீங்கைப்
போக்கிஒளி பரப்புதற்கே வழியைக்காண்பாய்.
எள்விளைக்க அறியாமல் எண்ணெய்தேய்த்தாய்;
இருள்கெடுக்க அறியாமல்விளக்கு வைத்தாய்;
கள்விளைக்கக்கலாம்விளைக்க வறுமைவாழ்வு
கால்கொள்ளும்படி விளைக்கக்கற்றுயன்றித்
துள்ளி விடுதலைவிளைக்க நாடுமுற்றும்
தூய்மையினைவிளைக்கஎன்னதொண்டுசெய்தாய்?
கொள்கையினைக் கடைப்பிடிக்கும் தீரம்இல்லைக்
கோழைக்குத் தீவிளிக்கொண்டாட்டம் எது?
சோராதே, பதறாதே பொறுமையொடு
தொண்டியற்றிக் கச்சைகட்டி முன்னேநிற்பாய்
ஆராலும் உனைவெல்ல இயலாதென்னும்
ஆண்மை நினைவினை நெஞ்சில் ஏற்றிவைப்பாய்:
பாராளுந்திறமையெனக் குண்டென்றேசொல்;
பாமரர்க்குச் சுதந்திரத்தில் ஊக்கமூட்டு
சோரதார் யாவரையும் சேர்த்தொன்றாக்கு
தீவிளி நீ கொண்டாடுங்காலம்காண்பாய்!

"பரதா, எழுத்தாளர் என்ற இலட்சணம் எழிலுடன் இங்கே இருக்கிறது. இதுகிடைத்தஇடம்"

"இதுவா? இது "அனுமான்" என்ற வாரஇதழிலே, தீபாவளி வெளியீட்டிலே இருப்பதுதான்."

"பரதா! இந்தப்பாடல்களைஎல்லாம் பார்க்கும்போது, இவர்கள் நமது பகுத்தறிவுப் பள்ளிக்கூடத்திலே படித்துப் பரிசுபெற்ற மாணவர்கள்போலல்லவாதோன்றுகிறது!"

"மாணவர்களல்ல! பகுத்தறிவுப்பள்ளிக்கூடத்துப்பாதை வழியேசென்றவர்கள்!"

"ஆகவே பரதா, நாம் நமது காரியத்தைச்செய்தால், எழுத்தாளர்கள், நமது வழிக்குவந்தேதீருவார்கள் என்று கூறுகிறாய்."

"நிச்சயமாக! அதுமட்டுமல்ல, அவர்கள் ஆரம்பித்திருக்கும் எழுத்தாளர் சங்கம், முதலிலே எழுத்தாளர் நிலைபற்றிய அக்கரையுடன் திருப்திஅடையும், பிறகு அச்சங்கம், புரட்சிகரமான மாறுதலை எதிர்க்கும்சங்கமாகக்கூடும், எழுத்தாளர் சங்கம் நமது முயற்சிகளைத் தமது பேனா முனையினால் அடித்தான்வோர்சங்கமாகக்கூடும், ஆனால் இந்தக் கட்டம்முடிந்ததும், எழுத்தாளர்சங்கம், புதுமை அமைப்பாளர்சங்கமாகமாறும்"

"மாறுமா? மாற்றித்தீர்க்கவேண்டுமா?"

"காற்றுஅடிக்கும்போது, மரங்களை ஆட்டிவிடப்போகிறேன் என்றுசொல்வதில்லையேவீரா, அதுபோல, காலவேகம் இருக்கிறதே அதுவேலைசெய்யும், அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும்; எதிர்த்தாலுங்கூட."

நிறுத்தவேண்டும்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாமரருக்குப்புரியாதமுறையை வகுத்துக் காட்டவேண்டுமென்றஎண்ணம்தோன்றுமல்லவா? எல்லோரும் காலால்நடப்பர், ஜாலவேடிக்கைக்காரனும் அதுபோலவே நடந்தால் கூட்டம்சேருமா? எனவே அவன் தலைகீழாகநின்றுகொண்டு, கைகளால் நடந்துகாட்டுகிறான்! அதுபோல, மக்களின் தலைவர்கள் விடுதலை இயக்கத்தைநடத்தும்முறையிலே மகாத்மாவும் நடந்தால், மதிப்புஇராது.எனவேஅவர், புதுமுறைகள்வகுப்பார், அவைகாரியத்திலே உதவக்கூடியவைகளாகஇரா,நமது ஆதிக்கத்தைஅவைஅழித்துவிடமாட்டா"

"ஓஹோ! புரிகிறது, புரிகிறது!"

"உலகிலே நமது ஏகாதிபத்யத்திடம் பொறாமைகொண்டவர்கள், சரியான விடுதலைஇயக்கம் இந்தியாவிலேநடந்தால், மறைமுகமாகத்துணைசெய்ய முற்படுவர். ஒரு சாதாரணத்தலைவன் அதைப்பெறுவான், மகாத்மா அதைமறுப்பார், தமது மகிமைக்குப்பங்கம்வருமோ என்ற பயத்தால்! இந்தியவிடுதலை இயக்கசம்பந்தமாக ஏன் ஒன்றும்செய்யாமலிருக்கிறீர் என்று நம்மைவேறுநாட்டினர்கேட்டால் நாம் புன்சிரிப்புடன்கூறிவிடலாம், ஏதாவதுசெய்யவேண்டும் என்றுதான்விரும்புகிறோம் ஆனால் காந்தியார், நடைமுறைக்குஒவ்வாத திட்டங்களையன்றோ காட்டுகிறார். அவர் ஒருமகாத்மா! அவருடையவழிமுறையும் மொழியும் விசித்திரமாக உள்ளன, அவருடையசொற்படிசாமான்ய மக்கள்நடக்கமுடியுமா? என்று கூறிக் கேள்வி கேட்பவரின்வாயைஅடைத்துவிடலாம். விடுதலைஇயக்க ஆர்வத்தினால் ஏதேனும் சில ரசாபாசம்நேரிட்டால், உடனே நாம் ஒருமகாத்மாவினால் நடத்தப்படும் இயக்கத்தின் அழகுஇதுதானா என்றுகேட்கலாம். காந்தியார் மகாத்மாவாகி, உலகிலேநாமும், அந்தப்பட்டத்தைப்பரப்பிவிட்டோமானால், பிறகு அவர், எதைச்செய்தாவது எதைவிட்டுக் கொடுத்தாவது, தமது 'மகாத்மா' பட்டத்தைக்காப்பாற்றிக்கொள்ளவேண்டிய நிலைமையிலேவந்துதீருவார். விடுதலை இயக்கம், ஒருபஜனை மடமாகிவிடும்! புரட்சிமனப்பான்மையினரும் வெறும் பூஜாரிகளாகிவிடுவர்."

ஏகாதிபத்யத்தின்மனதிலே இத்தஎண்ணப்போக்கைப்பெற்று, பிறகே, காந்தியாருக்கு மகாத்மாப்பட்டம்நிலைக்கும்படி செய்யப்பட்டிருக்கவேண்டும். இல்லையேல், ஒரு விடுதலைஇயக்கத்தின் தலைவருக்கு, மகாத்மாஎன்ற விருதுதர ஏகாதிபத்யம் ஏன்இசைகிறது? ஏகாதிபத்யம் எதிர்பார்த்தபடியே,காந்தியார்மகாத்மாவானதும், விடுதலை இயக்கம் பஜனைக் கூடமாகிவிட்டது, தேசியசக்தி பாபூஜியின்பக்தியாகிவிட்டது. இதன் பயனாகவே காந்தியார்தொட்டது அத்தனையும்துலங்காதுபோயிற்று.

காந்தியார், மகாத்மாவாக இல்லாமலிருந்தால், ஒரு முறை ஜனாப் ஜின்னாவைக் கலந்து பேசிவெற்றிபெற முடியாதுபோனதும், மீண்டும் சந்திக்கச்சரியான நிலைமையை அமைத்துக்கொள்ளும் காரியத்திலே இறங்குவார். விடுதலைஇயக்கத்தின் போக்கை, இனி அரசுகள் அமைக்கும் புதிய முறையிலே திருத்தி அமைப்பார். சாதாரணத் தலைவர் செய்யக்கூடிய இக் காரியங்களைத் தாமும் செய்தால், தமக்கிருக்கும் மகாத்மாப்பட்டத்திற்கு மதிப்பு இராமற் போகுமன்றோ! எனவே அவர், இதுபோது, உபவாசம் இருக்கப்போகிறேன் என்று கூறுகிறார். விடுதலை இயக்கத்தைப்பட்டினி போட்டுவிட்டார், இப்போது, இவரும் பட்டினி கிடப்பாராம், எதற்கு? மனப்புண்ணுக்கு அது மருந்தாம், நாட்டுமக்களிடையே நல்லபோக்கு உண்டாக்க அதுவழியாம், அவருடைய ஆத்மதிருப்திக்கு அது மார்க்கமாம். வேணிபிரசாதர்என்ற ஒரு வடநாட்டு வாலாற்றுச்சுவடியினர் காந்தியார் மனதிலே 5 மூட்டைகள்இருந்து அழுத்துகின்றனவென்றும், அவைதரும் பாரம் தாங்கமாட்டாமல் காந்தியார் உபவாசம் இருக்க எண்ணுகிறார்என்றும் சொல்லுகிறார்.

1. சமூக சீர்திருத்தம் சரியாக நடக்கவில்லை.

2. இந்துமுஸ்லீம் ஒற்றுமை ஏற்படவில்லை.

3. உலகிலே பலாத்காரம் நிற்கவில்லை

4. கொள்ளை இலாபமடிப்போரின் கொட்டம் அடங்கவில்லை.

5. விடுதலைக்கு வழி பிறக்கவில்லை.

இந்த ஐந்து பாரங்களால் ஐயனின் மனம் அனலிடுமெழுகாகி விட்டதாம், இதனால் உபவாசம்இருந்தாகிலும் உய்யும் வழிதேட உத்தேசமாம், எவையெவை இன்று காந்தியாரின் நெஞ்சுக்குவலி தருவனவாக உள்ளனவோ, அவைகளை எல்லாம்போக்கி விடுவதாகக் கூறித்தான் இவர் இதுவரை வேலை செய்துவந்தார், தோற்றார், தோல்வியை மறைக்க இந்த உபவாசத்தைத்துணைக்கு அழைக்கிறார்.

'பொறுமையுள்ளோர் பூமியாள்வார். பொறுப்பது கடமை. மகாத்மா பொறுக்கவேண்டும்'என்றுசுதேசமித்ரன், காந்தியாருக்கு உபதேசம்செய்கிறது.சீடரின் உபதேசம் குருவுக்குத் தேவைப்படும் விசித்திர உலகிலே நாம் வாழ்கிறோம். பொறுமையைவிடக்காந்தியாருக்கு இன்றுமிக மிக அவசியமாகத் தேவை, ஓய்வு, ஆகவேதான், பொறுக்கவேண்டும்,என்ற யோசனையைக் கூறுவதிலே பயன் இல்லை. நாட்டு நலனைக்கோரி, வாலிபர்கள், துணிவுடன் காந்தியாருக்குக் கூறிவிடவேண்டும், 'நிறுத்தவேண்டும் உமது அரசியல் வேலையை' என்று. நாட்டுவிடுதலையை மகாத்மாக்கள் பெற்றுத்தர முடியாது. காந்தியார் மகாத்மாவானபோதே, அவர் விடுதலை இயக்கத்தலைமைச்சக்தியை இழந்துவிட்டார்!!

பார்வதி பி. ஏ.

12-ம் பக்கத் தொடர்ச்சி

சத்திலடிபட்டுப் பசிதாங்கமாட்டாமல் திருட்டுத்தொழிலிலே ஈடுபட்டவர்கள் அங்கு மிருகங்கள்போல்கிடந்தனர். ஏழைகளைவஞ்சித்து, ஒருமங்கையின் உயிரைப் போக்கும் மாபாதக எண்ணங்கொண்ட பார்த்திபன், சீமான் ஆலாலசுந்தரரின் வாரிசு, செல்வக்குடிபிறந்தவன் என்ற காரணத்துக்காக அவனைச்சிறையிலே மரியாதையுடன்நடத்தினர். பார்த்திபனுக்குப் பணபலம்இருக்கிறது, சீமையிலிருந்து நிபுணத்துவம்வாய்ந்த ஒருவக்கீல் வருகிறார், அவர்எப்படியும், வழக்கைப்பார்த்திபன்பக்கம்வெற்றியாகும்படிநடத்துவார் என்று ஊரார்பேசிக்கொண்டனர். ஆலாலசுந்தரர்தமது சொத்துமுழுவதையும் செலவழித்தாகிலும் பார்த்திபனைக் காப்பாற்றுவார் என்று பேசிக்கொள்ளப்பட்டது. சிறைச்சாலை(வார்டர்கள்) காவலாளிகள், பார்த்திபனிடம் பணிவாகவே நடந்துகொண்டனர்.

(தொடரும்.)

குடிசைத்தொழில் நூல்கள்.

இந்நூல்களை வாசித்தால் சுதந்தரராய்த் தொழில்செய்துவாழலாம்.

	அணா.
தேனீவளர்த்தலும் தேன்சேகரித்தலும்	12.
சோப்செய்தல்	10.
சாயத்தொழில் மாணவன்	6.
குடிசைத்தொழில் களஞ்சியம்	8.
கற்றாழைநாரினால் பிரஷ்கள்செய்தல்	6.
பேனாக்கட்டைகள்செய்தல்	6.

கிடைக்குமிடம்:—
குடிசைத்தொழில் பதிப்பகம்
கொழப்பலூர் P. O. ஆரணி.

அனுதாபம்.

நமது நிலையத்தில் அச்சுகோர்ப்பவராகவும், சந்திரோதய நாடகத்தில் வேதம்மாள் வேடம் தாங்கியவரும், திராவிட இயக்கத்திற்குஆதரவானகட்டுரைகள்தீட்டியவருமான நமது தோழர் S. நாராயணசாமி என்பவர், சிலநாள் காய்ச்சலாக இருந்து இறந்து போனார். சிறந்த தமிழ்ப்பற்றும், பொதுத்தொண்டுஆர்வமும்கொண்டு உழைத்துவந்த இத்தோழரின் மரணத்தால் மனம் உடைந்து கிடக்கும் அவர் குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எழுத்தாளர் மாநாடு.

4-ம் பக்கத்தொடர்ச்சி:

தாளனால்! இவ்விதம்நடவாத, அறிவுக்கு ஏற்காதபடி எழுதுபவர் ஒருவகை. அறிவுடன் பொருந்தும் விஷயமாக எழுதுபவர் மற்றோர்வகை, எனஇருபெரும் பிரிவு எழுத்தாளர்களில், பலகாலமாகஇருந்துவருகிறது. இன்றுவரை இல்லாததைத்தீட்டும் எழுத்தாளர்களே ஆதிக்கத்திலிருந்து வருகிறார்கள், அவர்கள் தெய்வீகக்கவிகள், காவியகர்த்தாக்கள், ரிஷிகள், ஆண்டவன் அவதாரங்கள், அருள்மொழி பெற்றவர்கள், என்று பூஜிக்கப்பட்டுவருகிறார்கள். அவர்களின் எழுத்தினால் ஏற்பட்டுள்ள நிலைமை, உள்ளதை எழுதும் எழுத்தாளர்களால் மாற்றப்படவேண்டும். அந்த மாறுதலை எதிர்த்து, இல்லாததை எழுதியவர்களின் "வாரிசுகள்" "தத்துப்பிள்ளைகள்" "தாசர்கள்," எழுதுகின்றனர், புதியமொந்தையிலே பழயகள் ஊற்றித்தருகின்றனர். பரதா! இந்த இருபெரும்பிரிவு, எழுத்தாளர் உலகிலேஉண்டு. கோவை எழுத்தாளர்மாநாடு, இதுபற்றி இம்மியளவு கவனமும் செலுத்தவில்லை, அவர்கள் கூடினது அதற்காகவுமல்ல!"

''வீரா! நீசொல்வது உண்மைதான். பழமை புதுமை என்ற இருசக்திகளுக்கும் போர்நடக்கிறது. எழுத்தாளர்களின்பேனாமுனைகளே அப்போரிலே உபயோகமாகும்போர்க்கருவிகள்"

"ஆமாம்! அறிவாஸ்திரத்தை, உண்மையைத்தீட்டும்எழுத்தாளி ஏவுகிறான், இல்லாததைத்தீட்டும் எழுத்தாளி மதாஸ்திரத்தால் அதனை அழிக்கமுனைகிறான்."

"உண்மைதான்!"

"எழுத்தாளர்களிடையே, புதுஎழுச்சி, உண்டாகும் என்றுஎண்ணினேன் கோவைமாநாட்டிலே. நாட்டை நலியச்செய்யும், சமுதாயத்தைச் செல்லெனஅரிக்கும், ஒற்றுமையைஒழிக்கும், பகைமையையும் துவேஷத்தையும் மூடத்தனத்தையும்வளர்க்கும், பழயகருத்துகளை, எழுத்தாளர்கள் சாடுவர், தமதுதிறமையை இனி, அத்துறையிலே உபயோகிப்பதுஎன்றுதீர்மானிப்பர், புராணப்புரட்டுகளிலிருந்தும், வைதிகச்சுழலிலிருந்தும், சாதி அகம்பாவத்திலிருந்தும் மக்கள்விடுபடக்கணைதொடுக்க, எழுத்தாளர்கள் திட்டம்தீட்டுவர் என்று நினைத்தேன், எழுத்தாளர்களின் சம்பளஎண்ணிக்கைபற்றியும், அவர்களுக்கு இன்ஷியூர் செய்வதுபற்றியும் பேசிக்கலைந்தனர் என்று கேள்விப்பட்டேன், திகைத்தேன். எழுத்தாளர்கள் கூடினரா, வறுமையாளர் கூடினரா என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன்"

"வீரா! நீ குறிப்பிடுகிறபடி, பழமைக்கும் புதுமைக்கும் நடக்கும் போர்பற்றி அவர்கள் கவனித்திருக்கவேண்டியதுதான், ஆனால் தங்களைப்பற்றிப்பேசினதுதவறல்லவே. வறுமையாளராகவே எழுத்தாளர் இருப்பதா? முறையா?"

"நிலைமைக்கும் நினைப்புக்கும் தொடர்புஇருக்கும்விஷயம் நான் அறிந்ததுதான் நண்பா! ஆனால் எழுத்தாளர்கள் மாநாட்டிலே, புதிய சமுதாயஅமைப்புபற்றி, மக்களிடை புதியமனோபாவத்தைஊட்டவேண்டியமுறைபற்றி, ஏன் பேசவில்லை! பேசாததுசரியா? போர்வீரர்கள் மாநாட்டிலே, ரொட்டித்துண்டுகளின் அளவு பெரிதாக்கப்படவேண்டியதுபற்றிமட்டும் தீர்மானித்தால், போதுமா?

"இதுதானே முதல்மாநாடு! அடுத்தமாநாட்டிலே, இவ்விஷயம்பேசப்படும், ஒருவேளை."

"பேசப்படலாம், அடுத்தமாநாட்டிலே எழுத்தாளர்கள், மக்களை எண்ணிக்கொண்டுகூடினால்!! இப்போது எழுத்தாளர்கள் ஏராளமாக, பலப்பலவிதமான பக்குவமுடைய எழுத்தாளர்கள்உள்ளனர். நடையைக்குறிப்பிடுகிறேன்"

"ஆமாம்! கவிதாநடை, சித்திரநடை, காவியநடை,புலமை நடை......"

"நடையுடன் விஷயத்தையும் இணைத்துப்பேசு பரதா! சுருக்கெழுத்தாளர், பொறுக்கெழுத்தாளர், கிறுக்கெழுத்தாளர், முறுக்கெழுத்தாளர், சருக்கெழுத்தாளர், தருக்கெழுத்தாளர், நறுக்கெழுத்தாளர், உருக்கெழுத்தாளர், என்றுபல "ரக" எழுத்தாளர்கள் உள்ளனர்."

"வேடிக்கையாகஇருக்கிறதே வீரா! எழுத்தாளர்களிலே, இவ்வளவுவகையா?"

"இன்னமும் உண்டு. சிலர், சுருக்கி எழுதிவிடுவார்கள், ஏற்கனவேஉள்ளதை, இவர்கள் சுருக்கெழுத்தாளர்கள். சிலர் ஏடுகளிலேஉள்ளவற்றையும் பிறர் எழுதியுள்ளதையும்படித்து, பொறுக்கிஎழுதுவார்கள், சிலர் கிறுக்குத்தனமாகஎழுதுவார்கள். 'நாம்கூறுகிறோம், மறுப்பவரைக்கண்டுஅறிவாளர் சிரிக்க!' என்று எழுதுவர் முறுக்கெழுத்தாளர். சருக்கெழுத்தாளர் இருக்கின்றனரே, அவர்களின் எழுத்திலிருந்து எண்ணத்தைக் கண்டுபிடிக்கச்சென்றால் படிப்பவர் சருக்கிவிழுவர்; அன்பர் திரு. வி. க. குழாம் அது.

"மோட்சலோகமென்றும், நரகலோகமென்றும் ஒன்றுமில்லை!" என்று ஆரம்பமிருக்கும். ஓஹோ! பழமையை எழுத்தாளர் கண்டிக்கிறார்போலும் என்று மகிழ்ந்தாலோ, படிப்பவர் அடுத்தவரியிலே சருக்கிவிழவேண்டும். "அருளே மோட்சம், மருளே நரகம்" என்றிருக்கும் அடுத்தவரி, மோட்சநரகம் என்ற பழயஎண்ணத்துக்குப் புதியபொருள்கொடுத்து காப்பாற்றப்பட்டிருக்கும்.

"மோட்சமே நரகம்" என்று எழுதுவார் சருக்கெழுத்தாளர். இதேது விபரீதம் என்று பயப்படுவோம். சிலர் மோட்சத்திலேசேரவும் வேறு பலர் நரகம்புகவுமான நிலைமைஇருக்கக்கண்டால், உலகிலே தர்மம்குறைந்து அதர்மமல்லவாமேவிடுகிறது என்றுவருந்தி, மோட்சலோகத்திலுள்ளவர்கள் மனோவேதனைப்படுவர், அந்தவேதனையால் மோட்சமே அவர்களுக்கு நரகமாகஇருக்கும் என்று விளக்கமுரைப்பார் சருக்கெழுத்தாளர்.

"நாம் எழுதியிருப்பதன் உண்மையைஉணர, மனப்பக்குவம்வேண்டும், அப்பக்குவம்பிறக்க நம்பிக்கைதேவை, நம்பிக்கையூட்ட நாதன்அருள்தேவை, அதுபெற பூர்வபுண்ய வாசனைதேவை" என்று தீட்டுவார் தருக்கெழுத்தாளர். வசைமொழியின்வளத்தைக்காட்டுவார் நறுக்கெழுத்தாளர். பலஏடுகளைஉருக்கி ஊற்றுவார், உருக்கெழுத்தாளர். இப்படிப் பலவித எழுத்தாளர்கள்உண்டு. இவர்களின் பிரதிநிதிகள்யாவரும், கோவை எழுத்தாளர்மாநாட்டிலே இருந்தனர், ஆனால், அங்கு, ஏது எழுத்தாளர் என்பவர்களுக்குள் இருக்கவேண்டிய இலட்சியம் என்று நான் கருதுகிறேனோ அதுஇல்லை. தமிழகத்தில் தலைஎழுத்தாளர்கள் உள்ளனர், சிரிக்காதே பரதா! நமதுவிதி, வேறே ஒருநல்லவேலை கிடைக்காமல் எழுத்தாளனானோமே என்ற நினைப்புள்ளவர்கள் இருக்கின்றனர். மனதிலே தோன்றுவதைஎல்லாம் தீட்டுவோம் யாருக்கு ஏதுதேவையோ அதை எடுத்துக்கொள்ளட்டும் என்று எழுதித்தள்ளும் அலைஎழுத்தாளர்உண்டு. சீதையின் முகத்திலேபூர்ணச்சந்திரனையும், அனுமனின் வாலிலே அண்டத்தின் சக்தியையும்கண்டு மக்களுக்குக் கூறும் கலைஎழுத்தாளர் உள்ளனர். இன்னின்ன "ரேட்டுக்கு" இப்படி இப்படி எழுதித்தருவது என்ற விலைஎழுத்தாளர்கள் உள்ளனர். இன்று ஏதாவது எழுதாவிட்டால் ஊதியம் இல்லையே என்று வருத்தத்துடன் எழுதும் உலைஎழுத்தாளர்கள் உயிருடன் ஊசலாடுகின்றனர். சித்திரநடையாலும் சித்திரங்களாலும் படிப்போரின் சிந்தையைக்கவர்ந்து தமது கட்சிக்கு ஆள்பிடிக்கும், வலைஎழுத்தாளர்கள் வாழ்கின்றனர். ஆனால் உண்மையைஉரைப்போம், இல்லாததை உரைத்து இடர்விளைவித்த எழுத்தாளரின் பிடியிலிருந்து மக்களை விடுவிப்போம் என்ற கருத்துடன்உள்ள நிலைஎழுத்தாளர்களின் எண்ணிக்கை மிகமிகக்குறைவு. இந்த எழுத்தாளர்கள் தொகை, பழமையைச்சாடி, புதுமையைநாடும் எழுத்தாளர்கள், ஜாதியை

எழுத்தாளர் மாநாடு.

9-ம் பக்கத் தொடர்ச்சி.

ஒழித்து நீதியைநிலைநாட்டும்நோக்கமுடைய எழுத்தாளர்கள், மடைமையைமாய்த்துக் கொடுமையைக்களைந்து சிறுமையைச் சாய்த்து மக்களின்பெருமையை, வாழ்வின் அருமையைவிளக்கும் எழுத்தாளர்கள், கோபுரஅளவுகுவிந்திருக்கும் பழயகுப்பையைத் தமதுசிந்தனைஎனும் சண்டமாருதத்தால் அழித்தொழிக்கும் எழுத்தாளர்கள், அவர்சொன்னார் இவர்சொன்னார் என்ற அரண்அமைத்துப் பதுங்காது, எவர் எப்படிச் சொல்லியிருந்தால் எனக்கென்ன, என்கருத்து இதுஎன்று எடுத்துரைக்கும் எழுத்தாளர்கள், எண்ணிக்கையில், பெருகவேண்டும், வளம்பெறவேண்டும். அவர்களால் அநீதியைஅகற்ற முடியும், அறியாமையை அழிக்கமுடியும், ஆணவத்தைஇடுப்பொடித்து ஈனவாழ்வை உருக்குலைத்து ஊரார் எண்ணத்திலே புதியமுறுக்குஏற்றி, ஐயம்அகற்றி, ஒப்பற்றஓர் வெற்றியைக்காட்டமுடியும். ஆனால் அவர்கள், எண்ணத்திற்கு முதவிடமும் எழுத்திற்கு இரண்டாமிடமும், மக்களுக்கு முதலிடமும் தமது மனைக்கு இரண்டாவதிடமும், தரும்இயல்புபெறவேண்டும். மந்தைமனப்பான்மைவயிறுநிரப்பும், புதுவழிகாண அதுபோதாது! அலங்காரநடை புகழுரைவாங்கித்தரும், ஆனால் அந்த வானவில் அதிகநேரம் இராது! நடையைவிடநினைப்பு, நோக்கம், முக்கியம். இலட்சியமில்லா எழுத்து மணமில்லா மலர்! கோவைஎழுத்தாளர்கள், நாட்டுக்குப் புதியநிலைவளரும் விதமாகத் தமது பணி அமையவேண்டும் என்றுஎண்ணி ஒரு திட்டம்வகுத்துக்கொள்ளவில்லை.”

“வீரா! எழுத்தாளர் மாநாட்டுக்கு உன்னையாரும் அழைக்காததன் காரணம் இப்போது நன்றாகத்தெரிகிறது. நீ இவ்வளவு கண்டனங்களையும் கொட்டிவிட்டிருப்பாய், கூட்டத்தின் நோக்கமே கெட்டுவிட்டிருந்திருக்கும். அதைத்தெரிந்துதான், உன்னை அழைக்கவில்லைபோலும்”

“ஆமாம் பரதா! உண்மைதான். கோவைக்கு நான்போயிருந்தால் கேட்டிருப்பேன் அவர்களுடைய செவியும் சிந்தையும் அதிர; புராண இதிகாசங்களைச் சுவையுள்ள கனிகள் என்று கருதி, உள்ளே நெளியும் புழுவை எடுத்தெறியாது மக்களை உண்ணச் செய்கிறீர்களே, நீங்கள் எழுத்தாளிகளா, எண்ணத்தின் கொலையாளிகளா? என்றுகேட்டிருப்பேன். மக்களிடை மமதையை,மடமையை, மாச்சரியத்தை வளர்க்கும் பழயகதைகளைக்கட்டி அழுகிறீர்களே எழுத்தாளர்களா நீவிர் என்று கேட்டிருப்பேன், ஏழையின் கண்ணீரைப்பற்றிக் கதைதீட்டிவிட்டு இறைவன்மீது பழிபோடுகிறீர்களே, முறையா என்று கேட்டிருப்பேன். மந்திரம், தந்திரம், தலைவிதி முதலிய கொள்கைகளை முறியடிக்கும் சம்மட்டியை இரவல் பெற்றுக்கொள்ளவும் முடியவில்லையா என்று கேட்பேன், பரதா! என்கோபத்தைக்கிளறுதே, நான் என்னென்னமோ, கேட்டிருப்பேன்.”

“வீரா! நீ கூறினது உண்மை, எழுத்தாளர்கள் பட்டியிலே இல்லாமல், நடையழகு, மனை உயர்வு, புகழுரை ஆகியவற்றைக்கவனியாமல் எண்ணத்தை ஒருசிலர் எடுத்து எழுதிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒதுக்கப்படுவர், எழுத்தாளர்களால். அவர்களுக்கு இலக்கியப்பூங்காவிலே அதன் பாதுகாவலர் இடந்தரமாட்டார்கள். அவர்களைக்கண்டதும், எழுத்தாளர்கடிந்துரைப்பர், ஆனால் அவர்களின் எழுத்து, அவர்கள் வெளியிடும் எண்ணம், கீவிவரித்த எல்லா வகையான எழுத்தாளர்கள் உள்ளத்திலும் மெள்ள மெள்ளச்சென்று சேர்ந்துவருகிறது. படுபாவி இப்படிச் சொன்னானே என்ற கண்டனத்துடன் நமது எண்ணத்தை அவர்கள் வரவேற்று, கடைசியில் இதிலென்ன தவறுஎன்று தம்மையும் அறியாமல் கூறுவர், ஆகவே, எழுத்தாளர்கள் எழுத்தைக் கவனிக்கட்டும்,நாம்நமது இலட்சியத்தைக் கவனிப்போம் என்று வேலைசெய்தால் எழுத்தாளர்கள் நமது எண்ணங்களை எடுத்தாள்பவர்களாகிவிடுவர். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒருஎடுத்துக்காட்டு, கேள், நாம், பண்டிகைகளின் புரட்டுகளைவிளக்கி எழுதுகிறோமல்லவா? மற்ற எழுத்தாளர்கள் நமக்கு வேறு வேலைஇல்லை, நமது எண்ணத்தால் விளையும் பலன் ஒன்றுமில்லை என்றுகேலி செய்கின்றனரல்லவா. அவர்கள் அறியார்கள் பாவம், எழுத்திலேயே தமது எண்ணத்தைப்பதிய வைத்துவிடுவதால், நமது எண்ணம் அவர்தம் உள்ளத்திலே புகுந்து இடம்பெற்றுவிடுவது கூட அவர்களுக்குத் தெரியவில்லை,”

“நீ என்ன சொல்கிறாய் என்று தெரியவில்லையே”

“இதேபோலத்தான் அவர்கள், நாம் என்ன சொல்கிறோம் என்பதையே முதலில் தெரிந்துகொள்வதில்லை. பிறகு தம்மையும் அறியாமல் நாம் கூறுவதை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் வெட்கம் காரணமாக வெளியே சொல்வதில்லை, நாம் தீபாவளிப்பண்டிகை அநாவசியமானது, அநாகரிகக் கருத்துள்ளது என்றும், தமிழர் அதனைக் கொண்டாடக்கூடாதுஎன்றும் எழுதி வந்தோமல்லவா?”

“ஆமாம்! ஆனால் எழுத்தாளர்கள் தீபாவளி மலர்களிலே கவனம் செலுத்தினர், நமது பேச்சை ஏற்கவில்லை”

“நீ கூறுவது தவறு, அவர்கள் தீபாவளி மலர்களையும் வெளியிட்டனர், அதிலே நமது கருத்துக்களையும் வெளியிட்டுவிட்டனர்.”

“தீபாவளி மலரிலே தீபாவளி மறுப்பா?”

“ஆமாம்! விசித்திரம் ஆனால் உண்மை!!”

“எதிலே? என்ன விஷயம்? எடுத்துச் சொல்”

“பஞ்சமும் நோயும் மக்களைப் பாழ்படுத்துகிறதே, பண்டிகையாம் பண்டிகை, இது ஏனய்யா வீணாட்டம் என்று நாம் பலதடவை சொல்லி வந்திருக்கிறோமல்லவா?”

“ஆமாம் சொன்னோம்”

“சரி! இதோ படி, இக்கவிதையை.

ஏனோ வந்தாய், ஏனோ வந்தாய்,
தீபாவளியே, ஏனோ வந்தாய்,
வானம் பொழியும் மழையின் வாடைச்
சீற்றம் தனக்கு ஆற்ற மேனியை
மூடச் சிறுதுணி கூட இல்லாத
ஏழைஎன் வீட்டிற் கேனோ வந்தாய்?
அடைமழை ஒழுக்கால் தரையது நனைந்து
படைச்சுவர் ஓர்புறம் பாழா கிறது.
பொதும்பிய அடுப்பில் பூனை தூங்க
வெதும்பிய உளத்தோடு மனையாள் ஏங்க,
ஊரார் உடுத்திய ஆடைகள் கண்டும்,
பட்சணம் செய்யும் வாடை நுகர்ந்தும்,
வெடியின் சப்தம் இடியெனக் கேட்டும்
பிள்ளைகள் என்னை அல்லற் படுத்தி
தம்சிறு கன்னம் கண்ணீர் புரளப்
பார்த்தும் உயிரோடு இருக்கும் என்மனைக்
கேனோ வந்தாய்? ஏனோ வந்தாய்?

★

வறுமை யரக்கன் மாய்ந்தானில்லை
சிறுமை யரக்கன் தீய்ந்தா னில்லை
மடமை யரக்கன் மடிந்தா னில்லை
கொடுமை யரக்கன் குலைந்தா னில்லை
அவைஎமை ஆட்டி அழிக்கும் போது
எவனிறப் பிற்கோ இத்தீ பாவளி?

★

வைகறைப் புட்கள் வானிற் பாட
மையறு மலர்கள் மலரும் போதில்
கண்மலர் விரித்து, என்னோய்நீ நாடி

(7-ம் பக்கம் பார்க்க.)

தொடர் கதை,
★
சௌமியன்.

பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:—பார்வதியின் அன்புக்குப் பாத்திரமான குமார்மீது பழிசுமத்திய பார்த்திபன் என்ற கபடன், லோபி ஆலாலசுந்தரரின் சொத்துமூலம் நாட்டுக்குத் தலைவனாகலாம் என்று மனப்பால்குடிக்கிறன். அவன்நடத்திய மாநாட்டிலே பார்வதியால் கலகம்விளைகிறது. அவனால் நிராகரிக்கப்பட்ட ஜெயா எனும் தாசி, எழுதிய கடிதத்திலே, குமார்பற்றிய தகவல் கொஞ்சம் தெரிகிறது. பார்வதி, தன்சினேகிதி லலிதாவுடன் அதுபற்றி ஆலோசிக்கிறள், அவர்களை அக்ரமமாகப் பேசி அனுப்புகிறன் பார்த்திபன் அவன் தங்கியிருந்த ஓட்டல் சொந்தக்காரரான சங்கர ஐயர், பார்த்திபனிடம் பேசுகிறர் பிறகு..........]

மார்க்கசகாய பாதிரியாரைக் கன்னத்திலடித்துக் கடுமொழி புகன்று நின்ற பார்த்திபனும் அவன் சகாக்களும் அடுத்த கணத்திலே திகைத்தனர், காரணம், அதே நேரத்தில் போலீஸ் படை, அவர்களை நெருங்கி வந்துகொண்டிருக்கக்கண்டனர். எனவே பழிவாங்கும்எண்ணத்தைவிடத், தப்பினல்போதும் என்ற பயம் அவர்களுக்கு அதிகரித்தது, குழப்பத்தோடு அவர்கள் ஓடலாயினர். ஓடுபவர்களைப் போலீஸார் துரத்தினர். துப்பாக்கி பேசத்தொடங்கிற்று, ஒருவரிருவர் தவிர மற்றவர்கள் பிடிபட்டனர். பிடிபட்டவர்களிலே பார்த்திபன் ஒருவன். பார்வதியைச் சூதாக ஓரிடத்திற்கு வரவழைத்துக் கற்பழிக்கவும் கொலைசெய்யவும், உதவிக்கு வந்த மார்க்கசகாய பாதிரியாரைக் கொல்லவும் முயற்சித்ததற்காப், பார்த்திபன் மீதும், அவனுக்கு உடந்தையாக இருந்ததற்காகக்கூலியாட்கள்மீதும் குற்றப்பத்திரிகைதயாராகிவிட்டது, வழக்கு விசாரணைநடந்த சமயம், ஜெயாவின் வாக்குமூலம் வாங்கப்பட்டபோது, பார்த்திபனுடைய தூண்டுதலால், குமார் தொழிலாளர்களுக்கென்று சொல்லித்திரட்டிய பெரும் பொருளைக்கொண்டு எங்கோ ஓர் இரகசியமான இடத்திலே வெடிகுண்டுகள் தயாரித்துக்கொண்டிருப்பதாகவும், சரியான சமயம் பார்த்துப் புரட்சி நடத்த இரகசியத்திட்டம்இருப்பதாகவும்,தனக்கு இது விஷயத்தைப் பார்த்திபனிடம் பகைமை கொண்டதனல் ஒருவன்கூறியதாகவும் கூறினள். ஆனல் ஜெயாவுக்கு இந்தத் தகவலைக்கூறிய ஆளும் கிடைக்கவில்லை, இரகசிய வெடிமருந்துக் கிடங்கு, இருக்குமிடத்தின் துப்பும் தெரியவில்லை பார்த்திபன், மூடிய வாயைத்திறக்கவுமில்லை.

பத்திரிகைகளுக்குப் புதிய விருந்து கிடைத்துவிடவே, பத்திபத்தியாக இரகசிய வெடிமருந்துசாலையைப்பற்றிய பலவிதமான யூகங்களைக்கிளப்பி எழுதலாயின, அரசாங்கமும் விசேஷப் பரபரப்புடன், துப்பறிபவர்களையும், போலீசையும் நாடெங்கும் அனுப்பி வைத்தது. இந்த எதிர்பாராத செய்தி கேட்டுப்பார்வதி திடுக்கிட்டுப்போனள். குமார் இருக்குமிடம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுக்குப்பதிலாக, எங்கே அந்த விஷயம் தெரிந்துவிடுகிறதோ என்ற திகில் பிடித்துக்கொண்டது. ஆவேசமே உருவான குமாருக்கு, அநீதியை ஒழிக்க, பலாத்காரமான முறைகளையும் கையாள வேண்டுமென்ற எண்ணம் இருந்ததை அவள் அறிவாள். அந்தப்போக்கையே தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு பார்த்திபன், சூட்சி செய்ததை எண்ணும்போது, பார்வதியின் மனம் பதறிற்று. குமார் பிடிபட்டால், பணம் எடுத்துக்கொண்டான் என்ற குற்றத்தோடு, சர்க்காரைக் கவிழ்க்க இரகசியமாக ஆயுதங்களைச் சேகரித்த பெருங்குற்றமுமன்றே சாட்டப்படும். தண்டனை? ஆம். தூக்குமேடையன்றே! அந்தோ, ஏழைகளின் தோழனாக எண்ணற்ற மேடைகளிலே ஏறி, அவர்கள் உய்யும் வழிகளைக்கூறுவான், நாட்டின் நலிவு தீரும் என்று எண்ணினேம், ஆனல் தூக்குமேடையன்றே அவனைக்கூவி அழைக்கின்றது. காணவேண்டும், காணவேண்டும் என்ற நினைப்புக்கூடாதுஇனி. குமார் இனியார் கண்களிலும் படக்கூடாது. உலகிலே அவன் நடமாடமுடியாது, சர்க்கார் சுழல்விழியிலே அவன்சிக்கிவிட்டால் சாவு அவனுக்கு நிச்சயம்.

குமார்! யார் உன்னை இந்தத் தவறான பாதையிலே புகுத்தியது, பார்த்திபன் ஒரு பாசாங்குக்காரன் என்பதை நீ தெரிந்துகொள்ளவில்லையா! அவன் சட்டம் சமாதானம் சாந்தி, கட்டுப்பாடு, ஒழுங்கு அமைதி என்றெல்லாம் அரண் அமைத்துக்கொண்டு பேசிவருகிறனே, அவன் உன்னை, வெடிகுண்டுகள் தயாரிக்கும் விபரீதச் செயலிலே புகவைத்ததன் கருத்துஎன்னவென்பதை ஏன் நீ யோசித்துப் பார்க்கக்கூடாது—உன்னைச் சிக்கவைக்க, சாகடிக்க அவன் செய்த சதியல்லவா இது. தனக்கு எது சரியான சந்தர்ப்பம் என்று தோன்றுகிறதோ அந்தநேரமாகப் பார்த்து, உன்னைக்காட்டிக்கொடுத்துச், சர்க்காரின் தோழனாகிச் சன்மானம் பெறுவதற்குத்தானே பார்த்திபன் இது போலச்செய்திருப்பான். கள்ளங்கவடமில்லாத நீ அவனுடைய வலையிலே வீழ்ந்தாய், என்ன செய்வது? என்று, பார்வதி, எண்ணி ஏங்கினள்.

குமாரின் இருப்பிடத்தைக்கண்டு பிடிக்கும் முயற்சியிலே வெற்றி சுலபத்திலே கிடைக்கவில்லை. வெற்றி கிடைக்கவே முடியாது என்று சில அதிகாரிகளும், பெரும்பாலான மக்களும், எண்ணத்தொடங்கினர். சந்தேகித்தவர்களைப் போலீசார் விசாரித்து விசாரித்து,தமது வேலை வீணாவதைக்கண்டு சலித்துக் கொண்டனர்.

"அதெல்லாம் ஒரு யக்ஷணியின் உதவியப்பா" என்று மாந்திரீகப்பிரியர் கூற, "யக்ஷணியாவது பட்சணியாவது, அந்தத் திருட்டுப்பயல் எங்கேயாவது சாமியார் வேடத்திலே உலவிக்கொண்டிருப்பான். பண்டாரப்பயல்களை எல்லாம் பிடித்திழுத்துவந்து, சவுக்கடி கொடுத்தால் உண்மை வெளிவந்துவிடும்" என்று வேறெருவர்கூற, "யார் கண்டார்கள், அவனிடம் ஏதோ ஒரு பச்சிலை இருக்கிறதாம், அதனுல்தான் அவன் யார் கண்களிலும் படாமல் இருக்க முடிகிறதாம்" என்று இன்னெருவர் கூற, இப்படி ஊரார் பலவிதமாகப் பேசிக்கொண்டனர், உண்மை இருக்குமிடத்திற்கு வெகு தொலவிலே நின்றுகொண்டு. நயத்தாலும் பயத்தாலும் பார்த்திபனிடமிருந்து இரகசியத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை, போலீஸ் என்ன செய்கிறது? என்று எழுதினர் ஒரு பத்திரிகாசிரியர். தப்புத் துலங்காததற்குக்காரணம், திருப்பிடித்த மனகபோக்குள்ளவர்கள் துரைத்தனத்தை நடத்துவதுதான் என்று பொதுவிவகாரத்திலே புகுந்தார் வேறேர் ஆசிரியர். மேனட்டுத்துப்பறிபவரை வரவழைத்தால் விஷயம் விளக்கப்பட்டுவிடும் என்று சிலர் கூறினர், அது தேசிய கௌரவத்துக்கு ஹானி விளைவிக்கும் என்று தீப்பொறி தீட்டினர் தேசிய எழுத்தாளர். ஊர்இவ்விதமிருக்கச், சிறையிலே பார்த்திபன், உறக்கமிழந்து கிடந்தான், குமாருக்குச் சுருக்குக்கயிறு விழும் அவன் கிடைத்துவிட்டால், அவன் கிடைக்கவழி காட்டுவதற்குத் தனக்கே தெரியும்,புரட்சிக்காரனைப்பிடித்துத்தருவதற்கு இசைந்தால், தன்மீதுதொடரப்பட்டுள்ள வழக்கு வாபீசாகிவிடுமா,என்றயோசனை அவனுக்கு, குமார் பிடிபட்டாலும் தப்பிலும், பார்த்திபனுடைய வழக்குத் தனியாக நடைபெற்று,, அதற்கான தன்

(12-ம் பக்கம் பார்க்க)

பார்வதி பி.ஏ.

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

டனை [illegible]த்தான் வேண்டும் என்று சட்டநிபுணர்கள் கூறினர்.

"மந்திரி சபையின் மந்தபுத்தியினாலேயே, சதிச்செயல் புரியும் ஒரு கும்பலைக் கண்டுபிடிப்பது அசாத்தியமாகிவிட்டது. இந்தக்கட்சியைத் தொலைத்துவிட்டு, எங்கள் கட்சிக்கு ஆட்சி உரிமையை மக்கள் தந்தால், வெடிகுண்டு வீரர்களை அவர்கள் எங்கே ஒளிந்துகொண்டிருந்தாலும்சரி, நாங்கள் கண்டுபிடித்துத், தக்கதண்டனை தந்து, நிர்மூலமாக்குவோம். எங்களால் முடியும், இந்த ஏமாரிகளால் முடியாது" என்று ஆட்சியை இழந்த அரசியல் கட்சிப்பிரசாரகர், ஆளும் கட்சியைத்தாக்கிப் பேச இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டனர்.

"சதி செய்பவர்களை எங்களால்கண்டுபிடிக்கமுடியவில்லை, தங்களால் முடியும் என்று, மக்களால் மட்டந்தட்டப்பட்ட கும்பல் கூறுகிறது, இப்படிக் கூறுவதால் தங்கள் மேதாவித்தனத்தை நிரூபிப்பதற்காக அந்தக் கும்பல் எண்ணுகிறது. இந்தக் கும்பலின் சவடால் பேச்சினால் எதாவது நிரூப்பிக்கமுடியுமானால், அது இதுதான், சதிகாரருக்கும்இந்தக்கும்பலுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது, ஆகையினால்தான், நாங்கள் கண்டுபிடிப்போம், என்று அந்தக்கூட்டம் பார்தட்டுகிறது" என்று ஆளும் கட்சியைச் சார்ந்த பிரசாரகர் பேசினார். அதிகாரிகளுக்குள் போட்டியும், துவேஷமும் கூத்தாடலாயிற்று. வெடிகுண்டு வீசாமுன்பே, விபரீதங்கள் விளையலாயின, புலியைக்காணுமுன்பே கிலி பிடித்துக்கொள்வதுபோல.

"குமாரின் மறைவிடத்தைக் கண்டுபிடித்தே தீருவது என்ற கங்கணம் கட்கொண்டு வேலை செய்த, பிரபல துப்பறியும் நிபுணர் பிரமநாயகம், ஒருநாள் நடுநிசியிலே, முதலமைச்சரைத் தனியாகச் சந்தித்துப் பேசினார்; இதுவிஷயமாக.

"தங்களுடைய நித்திரையைக் கெடுத்துவிட்டேன்"

"குமார் கெடுத்துவிட்டான் என்று கூறுங்கள். அந்த விஷயம் விளக்கப்பட்டாலொழிய எனக்குத் தூக்கம் ஏது?

"எனக்குத் தெரிந்த வழிகளையெல்லாம் உபயோகித்துப் பார்த்தாகிவிட்டது, பயனில்லை"

"மிஸ்டர் பிரம்மா! நீங்கள் கைவிரித்துவிட்டால், நான் ராஜிநாமாச் செய்துவிட்டு ராமாகிருஷ்ணா கோவிந்தாஎன்று ஜெபம் செய்யப்போக வேண்டியதுதான், வேறுமார்க்கம் கிடையாது, கட்சியும் கடை கட்டவேண்டிவரும்.'

"குமார் பிடிபடாவிட்டால் நேரிடக்கூடிய விளைவுகளை நான் யோசித்துப் பார்த்தேன்; என்ன செய்யலாம், இருள் நீங்கவில்லையே"

"வெட்கக்கேடு, மிஸ்டர் பிரம்மா! ஒரு சர்க்கார் சாதாரண சதிகாரன் ஒருவனைக்கண்டு பிடிக்க முடியாமல்திண்டாடுகிறதென்பதும், சர்க்காரைக் கவிழ்ப்பதற்காகவே ஒருவனால் இரகசிய வெடிகுண்டுகள் தயாரிக்கப்படும் இடம் ஒன்று இந்நாட்டில் இருக்கிறதென்பதும் எவ்வளவு அவமானமென்பதை உணராமல், "என்னசெய்யலாம்" என்ற கையாலாகதவன்பேச்சாஎன்முன்பேசுவது'. "எனக்குஅந்த வெடிகுண்டுச் சாலையைக்கண்டுபிடித்துப்புகழ்பெற வேண்டுமென்றஎண்ணம் இல்லை என்று நினைக்கிறீர்கள். யாருக்கும் [illegible] கத்தானே செய்யும். ஆசை இருக்கிறது ஆனால் என்ன செய்வது, முடியவில்லை," என்றார் பிரமநாயகம்.

"அதெல்லாம் எனக்குத்தெரியாது. இந்தவிஷயமாக வெற்றிபெறக்கூடிய ஆள்எனக்குத் தேவை. உம்மால்முடியாவிட்டால், வேறுஒருவர் உமதுஇடத்திலே வரவேண்டியதுதான், வேறுவழிஇல்லை" என்று முதலமைச்சர் சற்றுக்கடுமையாகப்பேசினார், துப்பறியும் பிரமநாயகம் கோபங்கொள்ளவில்லை, மாறாகப்புன்சிரிப்புடன், சிகரெட்டைப்பற்றவைத்துக்கொண்டே, நான் ராஜிநாமாச்செய்துவிடுவதாகத்தீர்மானித்துக்கொண்டுதான் வந்திருக்கிறேன். அதற்குத்தங்கள் அனுமதிதேவை." என்றுகூறினார். முதலமைச்சர் பதிலேதும் கூறாதிருந்தார். துப்பறியும் பிரமநாயகம், சிலவினாடிகளுக்குப்பிறகு, ஒரு வெடிகுண்டுவீசினார்.

"பார்த்திபன் சிறையிலிருந்து விடுதலையடைய உத்தரவிடுவீர்களா? அவனை விடுதலைசெய்யவாவது உத்தரவளியுங்கள், அல்லது என்னை ராஜிநாமாச்செய்வதற்காவது அனுமதிதாருங்கள். இரண்டும் தங்களுக்கு இஷ்டமில்லாவிடில், பிறகு தங்களுக்குத் தோன்றும் புத்தியின்படி நடக்கும் உரிமைதங்கட்கு உண்டு" என்றான் பிரமநாயகம். முதலமைச்சருக்குத் தூக்கிவாரிப்போட்டது போலாகிவிட்டது.

பார்த்திபனைவிடுதலைசெய்வதா! உமக்கென்ன மூளைக்கோளாறாகிவிட்டதா? மிஸ்டர் பிரம்மா! இதுஎன்னபேச்சு. எனக்கு ஒன்றும்புரியவில்லையே. பார்த்திபனை விடுதலைசெய்தால், மறுவிநாடி என்வீடு, தீக்கிரையாகும். மக்களின் மனக்கொதிப்பு என்னைச்சும்மாவிடுமா? மேலும், அந்த அயோக்யனை, நம்மை இவ்வளவு பெரியநெருக்கடியிலே சிக்கவைத்தகாதகனை, ஏழைத்தொழிலாளரை ஏய்த்தவனை, ஒருபெண்ணைக் கொலைசெய்யத்துணிந்த பேயனை விடுதலைசெய்வதா? சட்டம், சட்டம்என்று பேசுவார்களே, அது என் ஆட்சியிலே செத்துவிட்டதுஎன்று பிரகடனம்செய்யவா? புத்திக்கும் நியாயத்துக்கும், என்ஆட்சியிலே இடமில்லைஎன்று உலகுக்கு அறிவிக்கச் சொல்கிறீரா? மிஸ்டர் பிரம்மா! நீர்தவிர வேறுயாரிடமிருந்தாவது இந்தப்பேச்சு வந்திருப்பின், அவர்களை நான்பித்தர்விடுதிக்கு அனுப்பிஇருப்பேன்" என்று முதலமைச்சர் ஆத்திரத்துடன்பேசினார். பிரமநாயகம், முதலமைச்சரின் கோபப்பேச்சுக்குக் குறுக்கேநிற்கவில்லை, ஆத்திரம் அந்தப்பேச்சினால் அடங்கி விடட்டும் என்றுஇருந்துவிட்டான். முதலமைச்சர் கூண்டிலிட்டபுலிபோல் தமது அறையிலேஉலவிக்கொண்டு, "பார்த்திபனை விடுதலைசெய்வதாம்! விடுதலை! பார்த்திபனை! மகாபெரியமேதாவி, அவனை விடுதலைசெய்யச்சொல்கிறார்" என்றுகூறி, உரத்தகுரலிலே சிரிக்கத்தொடங்கினார்.

"நீங்கள், யானை வேட்டையைப்பற்றிய கதைபடித்ததுண்டா?" என்றுகேட்டார் துப்பறிபவர். தணலைக்கிளறிவிட்டதுபோலிருந்தது அந்தக் கேள்வி." என்ன மிஸ்டர் பிரம்மநாயகம்! இன்று உமது மூளை இவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறது! யானைவேட்டைக்கும், நாம் பேசிக்கொண்டிருப்பதற்கும் என்ன சம்பந்தம்? நாம்ஏதோ,உயிர்ப்பிரச்னையைப் பேசிக்கொண்டிருக்கிறோம். நான், என் மந்திரிசபையின் எதிர்காலமே இந்தப் பிரச்னையைப்பொறுத்திருக்கிறது என்று தலைப்பாடாக அடித்துக்கொள்கிறேன். இந்தநேரத்திலே நீர் சிறுபிள்ளைபோல விளையாடுகிறீர்,விகடம்செய்கிறீர்.யானை வேட்டைபற்றியும், பூனை விளையாட்டைப் பற்றியும்பேச உமக்கு வேறுசந்தர்ப்பமோ, ஆளோகிடைக்கவில்லையா. சரி, சரி, நீர் நாளையதினம் இங்கேவாரும்,... ராஜிநாமாவுடன்" என்றுகூறிப், பேட்டி முடிந்துவிட்டது என்பதைத்தெரிவித்துவிட்டார். துப்பறிபவர், சாவதானமாக எழுந்திருந்தார், சட்டையைச் சரிப்படுத்திக்கொண்டார், அறையைவிட்டுக் கிளம்பி, வாயற்படி அருகேவந்துநின்றார், முதலமைச்சரைப்பார்த்து, "பழகின யானையைக்கொண்டுதான் காட்டுயானைகளை வேட்டைககாரர்கள் பிடிப்பதுவழக்கம்." என்று கூறிவிட்டு வெளியேசென்றார்.

★

பார்த்திபன்மீது பலமான குற்றச்சாட்டுஇருந்தபோதிலும், சிறையிலே அவனுக்கு மரியாதைகாட்டினர். பணத்தின் செல்வாக்கு அங்கும்தலைகாட்டிற்று. பஞ்

(8-ம்பக்கம் பார்க்க)

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.